534. கைமுறை வைத்திய அட்டவணை.

1985

25.6.85.

59

534

[illegible]

கைமுறை மருந்துவ அட்டவணை.

ஏடு எண் 534 / கை.வை.அ

எழுதும் நாள் 5.6.85.

எழுதுபவர் மருந்துவர், T. தேவபிச்சை.

69

காத்தானை யெவ்வுயிர்க் குயிரானை.
இருவினை மறை பூத்தானை., குன்ம தவாரணத்தானை.
புரந்தரனுக் கேத்தானை. தந்திரனை.
மந்திரனுங் காரணனை, எவருக்கும் மேத்தானை.
நாடொறும் வந்தனை செய்யென் முன் நிற்கவே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
வாழ்மலராள் நோக்குண்டாம் மேனிநுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

ஓ- நமோ வென்பர் கோஷமோ வென்றுரைக்கின்ற
குழந்தை வேலா.

ஆரங் அழகமுள்ள ஆறு திருமுகம்
மின்னுதிக்கின்ற சோதி வித்தை
நேமமாயுனைத் துதிப்பவர் நெஞ்சிலென் னேரமும்
நீயகலாது நிற்பாய்
நித்தனே, சித்தனே, சத்துரு சங்காரனே
நித்தியானந்த சொரூபா
சிவமயமாய் நின்றிருக்கும் சக்தி வேலாயுதா
சக்தி வேலாயுதா சச்சிதானந்த வடிவே
சித்தமே, சித்தமே சத்துரு சங்காரனே
சற்குணமான குருவே
மாயன் மால் மருகனே வாழ்பழனி முருகனே
உன் மலர்ப்பாதம் போற்றி போற்றி

(தொடர் 2ம் பக்கம்)

5.6.85

வள்ளிதெய் வானையுடன் மகிழ் சுப்ரமணியனே.
உன்மனதிலெனை ஆளா நினையே.

க

காலிலணி வெண்டையஞ் சதங்கை கலகலென
கடவுளே மயிலேறி.
கார்சந்த்ர லோகமும் பார்சத்ர விளையாடும்
கந்தனே யிந்த வேலா.
மேலணி பதக்கமும் நவரத்ன மாலையும்
விளங்கவே அலங்கரித்து
வேர் மருகு புனுகு சவ்வாது பன்னீர் தெளித்தும்
வீர வே பூசும் வேலா
பாலியாய், வாலியாய், பருவக்குமரனாய்
பார்க்க என் கண்ணின் மணியே.
பச்சை மயிலேறியே பட்சமுடன் வந்துதவும்
உன் பக்தனெனை சித்தமய்யா
வாலிக் குமரனே வாழ்பழனி மருகனே.
வறுமை யெனை அணுகாமலே
வள்ளிதெய் வானையுடன் மகிழ் சுப்ரமணியனே
உன்மனதிலெனை ஆள நினையே.

உ

ஆறு திருமுகம் ஈராறு கைவேலும்
ஓங்காரமான விழியும்
ஒரு கோடி சூரியபார்வை போல் திரேகமும்
உதிக்கின்ற குழந்தை வேலா
தீராத வினைபில்லி சூனியம் வைப்பு நோய்
சிரங்குசொறி செவ்வாப்பு விப்புருதி.
தீமைவாத நோவுடனும் அரையாப்பு நிலைவாதை
செவ்வட்டை பாண்டு வாய்வு புண்.

தொடர் 3ம் பக்கம்

5.6.85

தீரான குன்மம் வலிப்பு நோய்கண் ணோவு
குத்திருமல் விப்புருதியும்
குட்டம், மகோதிரம் .... சயம் பெருவியாதி
கொடிய மந்தார காசம்
வாராது தீவினை பறக்கும் உன் பேர்சொல்லி
வாழ்த்தி வெண்ணீறணிந்தால்
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்பிரமணியனே
உன்மனதிலெனை யாளா இனியே.

நி

செகத்தினில் மெய்கண்ட தெய்வம் நீ தெய்வமே
சிவசுப்ரமணியனே
தீய பிசாசு பேய், பிரம்ம ராட்சசு முனி
சினத்த கொட்டேரி இருளன், வீரன்
பகைத்திடும் மகா காளி பகவதி துர்கை.
பத்ரகாளி முதலாய்
பாவாடை ருத்திரன் துட்டப் பிசாசுகள்
பகைத்த பகையாளி முதலாய்
அகத்து உன் பேர்சொல்லி அஞ்செழுத்துச் சாற்(று)
அள்ளி வெண்ணீறணிந்தால்
அலறியே அலறியே அவையமிட்டோடவே
ஆக்கினை செய்த்துடும் முருகா
மகத்துவம் உனக்கிது செகத்தினில் மிகுத்திடும்
அழகு பழனி வாழ் கடம்பா
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமணியனே
உன்மனதிலெனை யாளா இனியே.

ரு

5.6.85

மனதினில் நினைப்பவர் மனதினில் இருக்கும்
மகா சுப்ரமண்ய தேவா
மனதிட்டகாரியம், புத்திரசம் போகமும்
வாழ்வு சம்பத்து நிறைய.
உனை நினைப்பவர்க்கிது உண்மையென்றுரைக்குமே
உதவி செய்வாய் மெ[illegible]ரா
ஊமை செவிடு குருடு கைகால் ஊனம்
ஊழ் வினையான முடமும்
அநுதினமும் உனை மனதில் நினைவிலும் மாறாதவர்க்கு
அதிசயமாகி வருவாய்
ஐய முத்தையனே தெய்வ சுப்ரமண்யனே
ஆறு முகமான குருவே
மனதினில் நினைத்திடும் தினந்தினம் தொழுதிடும்
வாழ்பழனி வாழ் கடம்பா
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமண்யனே
உன் மனதிலே எனையாள நினையே.
உ.

ஐயனே சிவசுப்ரமண்யனே
உனையன்றித்துணைக் கதிவரத்தியுண்டோ

ஆயிரமாயிரம் ஒருமைசற் போலவும்
அரி[illegible]யின் முன் கிரியது போலவும்
ஐய்ய அரவத்தின் முன் தவளையது போலவும்
ஆழ்ந்த புலிக்கூட்டத்தில் பசுவது போலவும்
ஜோதி அட்சர குமர சிவா ஓம்,
அய்யுங் கிலியுஞ் சவ்வுஞ் சித்திஞ் சண்முக
பவானும பய்யனை தீயூமுன் மிழந்தையது போலவும்
பாவிசண்டாளர்முன் பதிவிரதை போலவும்
பதையுறேன் சிறையில் வதையுறேனே.
பரவுபன் போல நீங்கிவிலக.

தொடர் 5ம் பக்கம்.

வையகம் புகழ் பழனிவாழ் வடிவேலா
இந்தச் சத்துரு வையகல வேகி கிருபைசெய்வாய்
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமணியனே
உன்மனதிலெனை ஆளாகினியே.
கா

சிவசக்தி மைந்தனே சிவசக்தி வேலனே
சிவசுப்ரமணிய தேவா
ரீங்கார, ஓங்கார, பாங்கார, வாங்கார
ஆங்காரமாக வெசீரிவா
அறுமுகவனே எவன் சத்துருவாகிலும்
எவன் சத்துருவாகிலும் எதிரிட்ட பாவியை.
ஈ.ரகிக் கனங்கவே ~~எதிரிட்ட பாவியை~~ குடல்பிடுங்கியே
இரண்டு துண்டாக்கு வேலா
யேகவி சாத்தானி இனியென்ன இனியென்ன தாமதம்
இதுசமயம் வெட்டுவெட்டு
நிவர்த்துவாரென்றிருத்துவாய் கட்டழலே
கொட்டழலே சதுகுமார்பில்
நமோ, நமோ, சிவசிவா, நமச்சிவாயா வென்று
உன் நாவஞ்செழுத்தை யோதி
எவன் சத்துருவானவன் வயத்தைக் கிழித்து
இரத்தபானம் வாங்கிடு தெண்டபாணி
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமணியனே
உன் மனதிலெனை யாளாகினியே.
எ.

சரவண பவா நமோவென்னுஞ் சண்முகபவா நமோவென்னுஞ்
சடாட்சரம் ஓம்கிரியும் ஸ்ரீயும், ஐயுங்கிலியுஞ்சவ்வும்
சக்தி வேல் கடம்பா முருகவேள் கந்தனே
கீர்த்தி என் கரத்தில் வா ஓம்
வயிரவனே ஏவியே வெரித்திட கொடுமையேவல்
வயிரவனே சேனையை யூர்ந்து
காலவயிரவனே ஏவியே ஏவியே
ஏவல் பிசாசுகளை நொருக்கியே கட்டு கட்டு
எதிர்ப்பட்ட பூதபிசாசுகள் என்தனைத் தீண்ட விலக.
அரவணை வா வயிரவா வால அப்பய்யனே
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமண்யனே
உன் மனதிலே நினையாதினையே.

அ


ஐ கையில் கிண் கிணியும் ஓங்கார ரீங்கார
ஸ்ரீங்கார, வாங்கார, ஹோங்கார, ஆங்காரமாகவே
ஓட வாழ் குழந்தை வேலா
திருநீறு பூசிட்டு தொட்டு துட்ட பிசாசுகளை துரத்தியே வெட்டு வெட்டு
சிகார, உகார, வகார, நகார, மகார, சகார
வென்றுசொல் திக்கு வந்தணுகாமலே
வயிரவனைக் காவல் வை திகைத்திடும் பிசாசு
ஒருகாளி துர்க்கை பிடாரி
பகவதி, மகமாயி, காட்டேரியென வந்தணுகாமலே தள்ளு, தள்ளு
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமணியனே.
உன் மனதிலே நினையாதினையே.

சி.

நடனமயிலேறியே நாயகி ஆடவே
நாலிரண் டெட்டுத் திக்கும்
நெட்டிடும் வயிரவனைக் காவலாகவே வீரபுத்திரனையும்
அடங்காத பூதபிசாசு கூட்டமேயிருக்க.
அடக்கிவாய் கட்டுகட்டு.
அடி, அடி, பிடி பிடி, குடு குடு, வடு வடு
நடி நடி, யிட யிட ஆவேச ஆவேச
ஆக்கினை செலுத்து முருகா.
அடலிகுறைவெண்ணீறணிந்திடச் சக்தியே
சக்தியே வரச் சொல்லுவாய்
சிரத் திரு வீரபத்திர சிவசுப்ரமணியா வென்று
சடாட்சரம் உச்சரிக்க.
சுருக்கிடு, சுருக்கிடு, பிரிக்கிடு, உருக்கிடு
முறுக்கிடு, முறுக்கிடு, சீர்க்கிடு, சீர்க்கிடு
வரிக்கிடு, வரிக்கிடு, பெருக்கிடு, பெருக்கிடு
துண்டு துண்டாக வெட்டு
அடக்கிவாய் கட்டடியே குருத்துவா வயிரவா
வால சுப்பைய ராக்கினை
வள்ளி தெய்வானையுடன் மகிழ் சுப்ரமணியனே
உன் மனதிலென்ன ஆராதினையே.
ய

சரவணபவ, சண்முக பவ, கந்தா பவ, கடம்பா பவ
முருகா பவ, வேலாயுத பவ, விசாக பவ, அழகா பவ
பராசக்தி பவ, குமர குருபர பவ, தேவா தேவ சேனாபதி.
பவ, சுப்ரமணிய சுவாமி பவ சுவாகா.

8ம் பக்கம் அறுகோணச் சக்கரம்



ஞானம்

தாமதமில்லாமலே யென் பாலயத்தில்
போமாவில் வழிகட்டப் பெரந்திவியர்கள்
எமதூதர் போலே யிருந்தார்; நிண்டை சொணமையா வென்றேன்
அவர்கள் நாம, ஞ வென்றார்
யாட அண்டை வஸ்து வியென்றார்
ஏனு தானு கோட்டலா வண்டை வஸ்தினி
அிாப்பன் வென்றேன்; யிடையாலே வஸ்திவியென்றார்
பாலய மெஞ்சுட யொச்சி தேனு வென்று சொல்லியே நின்றேன்
நயவர்த்தகள் வஸ்துவி யென்றார்
இக்கடாய வர்த்தகள்- ஞ-லேது இல் போடுவென்றேன்.
இவடுசெப்ப வஸ்த்திவி யென்றார்
யீமாட்டார் திவறு காது நில்லாம தா தா வென்றேன்
இம்ம காக்கு தாவுண்டை தே சோதனு யிம் மணியாவினக்கு
தாவுலேது கலிக்கினமாட்டார் சந்தலி தோவத்தி தூவோய்
என்ற அடன்மந்தி போவென்றுரைத்தார்

மிஞ்சி நடந்தேன்; அந்த அதிசயமில்லாமலே பாரிசயத்தில்
வந்த சிநேகியாய்த் துணிக்கர வீதிச் சோடு சென்றேன்.
புசிபலனுலே கொன் புலியைக்கும் திசை பெறும் பாட்டேகொன்
நிலேகொன், நிலேகொனு சானுகொன், சிலமவுகொன்,
மட்மதுகொன், அசநல்விகொனுடன், அயிதாருகொன், பத்ரே
கொன், தாஉத்டநல்விகொன், தாவத்துகொன், தித்தாருகொனுடன்
சிமுசெருகொன், மில்தாதூகொன், லாவுகொன் கத்தியிற்கை
வைத்தால் ஞேர் நடுங்கும். மாபோல்கொன், மோதினுகொன்
அல்லிகொன், ராத்தேகொன், சாத்தாவுகொன், யினுதுகொன், ஆத்
தேமெகொன், மேக்கிவுநல்விகொன், தரைபுகழ் வாக்குநல்விகொன்
புலியைங்கும் புலியைங்கும் திறையா துறைகள் மெச்சமடம்
அில்தானுகொன், நிறைபதிறையிமல்துகொன் திசைதோறும்
பரவிய கொண்ட பலபலுகொன் இன்னமும் பல பேர்கள்
செமதுள்ள மன்னவர் ஒக்கிறமலஸ்தரையும் உன்னி
திகுடாரமும் சித்திருகள் தினையும் கண்டேன். அவர்
கள் முன்னே நின்றேன். எங்கேயத்தா போவென்றார்
லச்சிதிறமே காயாரத்தலேன் காயாவென்றேன் கெங்கு
டேயாம் யாவதேது மாவேனுன் தீய்ப் போவென்றார். அபத்ர
காத்திரன் றேன். பிச்சனும் பயிட்டோவென்றார். குறுணி
ரெண்டுச் சித்மாணிசெவி தவர்கள் மெச் சவிநுந்தேன்.
அச்சகனுக் காவரேயென்றார். அப்புமை கிச்சட கினுக்
கிகிறுயானக் கோவென்றேன். உக்காபி பக்கிறென்றார்
பிசுமன்லாமக்கிமத்தி ஆரல் கண்டகணத்திலே திக்கிமுக்
கிட்டாட இருத்தேன். இருகண்ணுஞ் செக்கச் சிவந்ததுகண்
டு பையிக்குள் கையிட்டு இவரேபானு சிபாரியென்
றிருகை நிறைய வாரியிட்டார் பையவழிநுந்தேன். சிவுறு
சிவரேயென்றார். பளாணைசாக்கிர் அந்தமென்று - மென்
று சொல்லி மேற்கே நடந்தேன். புள்ளிச் சட்டைக்காரர்
களும் சிவாத்தில் வெள்ளிக்கட்டு விருதுள்ள வீரர்களும்
திள்ளியிட்ட றானுவரும் இடத்திடுங்கள் கள்ள
வீட்டடைக்கும் வெள்ளாக்காரர்களும், கிட்டாரிக்காரக்
ளும் எட்டியாரு வெட்டாதல் திணிக்கும் வேங்
திர்களும் பட்டாணி றாவுத்தரும் தொக்கைடுத்துச் சிட்டா
திப்பா தடக்குந்தினை.

மக்களும்

இருந்திடும் இடம் பார்த்தேன் எசமான் பொருத்
தியகூடாரை போல வாங்கிண்டேன். கரும்பிறந்தோர்
திரமென்றேன். அப்புறம் திரும்பு நின்றதில் குத்திரும்பி
னேனே. கிடைகளும் கிடைத்ததுவும் பெருவிதமுடையே
மதக்கிரி டையதுவும். புடைதிகழ் கூட்டங்களும் படை
திணிலஞ் சாமலோடாப் பாயும் பரிதிரளும் வேணதெல்லாம்
பார்த்தேன். பஞ்சகல்யாணி யென்றழை பெரியதனி லவரும்
கிரணவும் அரிதுகிண்டீர். குதிரையஞ் சாணியங்கில்லா தசம
யத்தில் போயி சுழியுஞ் சுழையும் பார்த்தேன். கொண்டு
போக வழியுந் துறையும் பார்த்து மனதில் வைத்தேன். பொ
ழுதுங் கிடைத்திசையிலே மறைந்திட தொடுதங்கிருந்தே
னாய் போ,. திரைதனால் லாம் முண்டை செய் தொழிலா
ழிந்து போசனங் கொண்டு அவரவர் கூடாரத்தில் கண்-
துயில் கொண்டார்கள். இப்படித் தண்டினில வரும்
உண்டுறங்கும் போதினில் எழுந்திருந்தேன். பட்டாணி அதி
யைப் போலுருவும் தானெடுத்தேன். ஆதிரை உச்சமாக
நாழிகை பாதி இரவென் றெண்ணிப் பார்த்துக் கொண்டு
போனேன்; பரியிடத்தே. தானையந் தானே பிரங்கிருந்
ஜைகை கிண்டேன். நானே திரும்பி விட்டேன். திடசித்
தமானேன் மறுபடி போனேனே. பதுங்கி நகர்ந்து நெருங்
கித் தூணுக்குள் ஒதுங்கி, மறைந்து மந்திரம் உருவேத்தி
ஷிதம் பெருஞ்சொக்குப் பொடியை எடுத்தொருதம்
பொடியுடனே கலந்தெறிந்தேன். எரிந்திடும் மயப்பொ
டியால் தின்னி அமரந்துயிலுத்தவரும், மயங்கவுந்
ஜர். அறிந்து கொண்டருகில் சென்றேன். குதிரையைச்
சொரிந்து கொண்டதனுடன் கூறுகுறிந்தேன். பார்த்திடமட்
டமும் கிறணவும் சூரிக்கை முழுங்கிய வீரத்துடன்
கோரத்தில் பாரி வரவே. குதிரைக் கொட்டாரத்தில்
ஒலித்திடுன் னேரத்திலே, தாக்கிய வீரவநுதண்க்கும்
நிம் மிட ஆக்கினைக் காவலிலே, யான் பாலே காக்கையுந்
கூடாயாதே நா மேணிப் பார்க்கவேணுமோவென்றுயர்
கினவா

பாராமல் பரிகாரம் போனபின்பு, வாராத பொருள்களைக்கு
வந்ததென்று தாராளமாக வந்தேன். குதிரைக்கு நாராலே
கிடைவாளம் கொண்டுபோட்டேன். திருத்துக் கயிறு தாத்தேன்
காலினிலிருந்துக் கட்டிய கயிற்றை அண்டவிழ்த்தேன். கொ-
டுத்த பட்டாணியைப் போலேறிக் கொண்டு முத்திரைத்தட்ட
(வைத்து)
னேன். கிடைட வயத்தில் நடந்தது. மனவேகமாகவும்
கிடந்தது. கிண்டுமனங்களைக் கடற்றோர் திடத்தினாலே போம்
பொழுது வழிகட்டைக் கிடந்தவர்கள் கண்டு திங்களின்
போல வெக்கட்ட ஒருமிக்கி பொய்யவர்களைவ் வரோ செய்
போவென்ற குதிருந்து, தக்கிற தோவென்றார்
முந்தற தீண்டுக்கிறல்து போயினாரே, வார் நீ பிலிச்சிக் கோடீ
ரோப்புறவனோ அந்துக்கு னோனு போற்றுமாணுப்பாரிக்கண்ட
ட வந்தினு மிறந்த பத்தறங்கா உண்டண்டா வென்டபற
வந்தேன் கோட்டாவாலே கோணுரேயென்றார் திருவுக்கர்கள்
கிட்டயிருந்தவரெல்லாம் ஓடியே வந்து, சோடுனைக்
கோவென்றுமரித்தார். மாறுங்கால் தொங்கடா ஜேட்டா
உனக் கிச் சோரச் சோரயென்றார். இவந்துக் கோலுக்க
மாயெலச் சிதறமே கில்தீருவேக் குபிரனேக்கு.
மயறுத்துக் கெச்சுவங்கா சுவங்காவென்றுரேன் —
பலாப்பழமே சாகேப்பு பிலாமலேப்பு சிவுரேயென்றார்
அத்துகளெல்லாங் கடந்து சென்சியில் தேத்திய
அருண உதியத்தினில் வந்தேன் வர்த்தகனை எத்திர
ரைத்தேன். குதிரையை விற்றுவிடவேணுமென்று பதிலி
சென்னேன் நாறுமன்ங் ~~கொ~~தண்டொருவன் குதிரைக்கு
குற்றய சுழிசித்தங்களைப் பார்த்து ஏறி நடையும்
பார்த்தான் விலை எழுநூறு பொன்டால் கயரும் தரு
வேணென்றான் நான் தேடாப்பொன்னுக்கு மாத்துரை
ஏன்தான் பார்க்கவேண்டும் என்று நினைத்து நான்தான்
சம்மதித்தேன் வாங்கிக் கொண்டேந்தாவென்று சொல்
லி எண்ணிவிடுத்தேன் நான்.

சீதசேனை வேள் கோட்டை நகர் போற்குட விஜய
திருமலி நரேந்திர சுவாமி நான் சீமையில் கொலுவில் லேயெந்து
கிரசெம்பலுந் திரமதாய்ப் பெற்றிருக்க.
ஸ்ரீ ராம லெட்சுமணர் தினக்கு நிகராகவே
வச்சிர தேகமும் பெற்றிருக்க.
கீர்த்தவில்× வாசமும் உத்தியோகமும் என்தன் கையில் வசமாயிருக்க.
கிணிசமுடனே தி...சி அமுறும் என்தன் கால் போல் வார்ந்திருக்க.
கவிராசர் புவிராசர் பீதுகவி சொல்லியான் கவியாகி வேண்டிருக்க.
கண்டு கிளாவைக் கொண்டு வாவென்று ஊழியக்காரரும் படையெடுக்க.
ரணமுத்து வீரனொருவன் நமது வீட்டுதனில் களவால் வந்து
இரவில் கன்னங் கொண்டு பூட்டை இரண்டாய் முறித்துப்புரம்
கதவைத் திறந்து வைத்துக் கடகை ஒரு நாள் கைக்குள்ளாத வன்
பதறியே கைகொண்ட உடமையெல்லாம் கண்டு
நிசமென்று வண்ணவிபரமாகவே கவிதனிற் பாடவந்தோம்
நித்து மெத்தை ஒரு சோடு, நுவறுக் கொறு சோடு
நாலஞ்சு பவளமொன்று நல் வயிரமொரு சோடு
ஜெதக்கிடையமொரு சோடு மிக நயனமொரு சிட்டையொன்று
நகைவாளி ஒரு சோடு ஒரு நாள் மாத்திரம் தரித்த
நிவவஸ்திரம் ஒன்றுடன், பழைய வஸ்திர வைன் ஆனார்
பய்யனொன்று நின்றாக சிவபூசை செய்கின்ற வேளைதன்ல்
நின்னமை பெறவே தர்க்கும் நாலுமுகம் ஆறுமுகமான
ருத்திராட்சம் நாற்பதெனலாம் ஐம்பநாறு நாயப்போ
ன பட்டொன்று அதைப் பார்த்து நாடா தெரிந்துவிட்டான்
நமது கலியாணத்தில் நீர் விசாரணை செய்து நிற்கின்ற
பாகையொன்று நித்த நித்தம் கட்ட உழுகின்ற ஜோ
டியொன்று நிகரில்லா சூரியொன்று நீலநிறமான
உலக்கையொன்று, பூட்டொன்று.

தெய்வக் குலப்பாத்திரமொன்று நெல் விதைப் பானையொன்
றதனை எடுத்தவன் நிலமதனில் வைத்துவிட்டான். வெகுநேர
த்தியாக இரண்டாவம் மோனன்றன்னம் நிறைய ஒருபானையுட
னே நெருங்கி அஞ்சாமலே கைக்கொண்டு போனவர்கள்
நின்றவர்கள் வந்தெடுத்து நீள்புவிதனில் கிடங்கு கண்டெடுத்
துதான் இன்பாவுரைத்திருக்க என்னவோ உன் மனது
மெதுவாய் இருக்கின்ற விவரம் தெரியவில்லை. நிச்சயமாக
வே பச்சம் வைத்தென்மீது நீ தயவு செய்குவாயே.

அரிஓம், மாசி தோச தேவதைப் பிறந்த. நின்றுக.

சித்திரை மாசந்தன்னில் தேவதை யென்னும் பேயே.
உத்திடும் மயக்கம் வாந்தி, உடம்பினில் சுரமுண்டாகும்
செத்திடுங் காலுங் கையுஞ் செய் பஞ்சவர்ணஞ் சோறு
முத்திடுங் கோழிமுட்டை முருங்கைக்காய் எள்ளு வெல்லம்
வைத்திடு நாலு சந்தியிட்டிடு மேனு நாளே. க.

வளர்ந்த வைகாசி தன்னில் மாணவ னென்னும் பேயே கேடா
தளர்ந்து மெய் குளிர்ந்து வாந்தி தின்னுடன் கழிச்சலுண்டாய்
உளர்ந்த டுமார் வேர்க்கும் உடுத்துடன் [illegible] அரிசி
குருத்தின மாவுந் தீபம் கோடையிலளர்ந்து வையே. உ

அறிந்துபின் ஆனி மாதம் அல்லகி யென்னும் பேயே
செறிந்துபின் கலாய்ப்பதாகி சுரமுண்டாயழுது வாந்தி
பிறிந்திடுங் கதலிமாவும் பிசைந்து இன் விளக்கு வைத்து
யெறிந்துபின் (வீ) பிடார் கோவி (ல) லியங்கு முன் வைத்
திடாயே. ந

ஓ)

ஓடு நீ ஆடிமாதம் புலங்கிலியென்னும் பேயே.
கூடுமெய் தளர்ந்து கூசி கூப்பிட்டுக் கையில் தொங்க.
ஆடுமே வாயும் நீரும் மலருடன் துவரை சோறும்
ஆடுமே பலியும் செய்து அய்யனார் கோவில் வையே.
௪

அய்யமாவணி மாதத்தில் அங்குலியென்னும் பேயே
மெய்யது கருதிரைத்தும் வீழ்ந்திடுமது சோறும்
பொய்யல்லவென்னப்பாவை 4 துமஞ்சள் சீஃ பூவும்
தெய்யனாள் பண்ணியோடு சந்தியில் பெலிசெய்வாயே.
௫

கன்னிமாதம் ⊛ புரட்டாதிமாதம்

⊛ புரட்டாதி.

சந்தியாங்கன்னி மாதம் சந்தியென்னும் பேயாம்
வந்திடும் வெறிக்கப் பார்க்கும் மயங்கிடும் பல்லிக்கிட்டும்
மந்திரங் காது கோரா மலருடன் சோறும் பாலும்
சிந்தமாம் பழமும் நெய்யும் தியங்கிடா சடலி வைய்யே.
௬

+ துலா மாதம் — ஐப்பசி மாதம்.

+ ஐப்பசி.

தியங்கிலாத் துலாமாதத்தில் சண்டகியென்னும் பேயே.
மயங்கிடும் பல் கடிக்கும் மாந்தமாய் வயறுநோவும்
பயங்கிடத் தயிரும் சோறும் பருந்துநற் கதலி தேங்காய்
அயகடர தாகச் சற்றே சூழ் குளக்கரையில் வையே.
௭

குளிர்ந்த கார்த்திகைமாதத்தில் அந்தரியென்னும் பேயே.
தாழ்ச்சதன் வெள்ளிமேனி தாகமும் புத்தியாகும்
வாழ்ந்திருங் கழிச்சலாகி மாவினில் பதுமைபண்ணி
கீழ்ந்த நெய் பருப்புஞ் சோறு கொண்டுபோய்ச் சந்திவையே.
௮.

கொண்டமார்கழி மாதத்தில் சூட்சிதனென்னும் பேயே
விண்டமாசுரங்களாகி மேனியுங் கருத்துதந்தம்
பண்டுதான் உண்டதெல்லாம் பலபல கழிச்சலாகி.
கொண்டுதீ மீனுஞ் சோறும் கிடைய முச்சந்தி வையே. ௯.


கிடைய தைமாதந் தன்னில் காலமணியென்னும் பேயே.
தொடையிடை குளிர்ந்துகால்கை அருண்டிடும் அசுது சேரும்
படையுறு கருப்புச் சோறும் பாக்குவெத்திலை பூவோடு
விடையுமுன் னேரந் தன்னில் விளக்கோடுசட்டியில் வையே. ௰

விளங்கியமாசி மாதம் மோகினியென்னும் பேயே.
கிளங்கமா வரிப்புண்டாகில் கண்களுஞ் சிவந்துமேனி
வளங்கொடாச் சுரமுண்டாகி மறு விளக் கருப்புச் சீலை.
இளங்கிடாப் பூவுஞ் சுட்ட இருசந்தி பலிசெய் வாயே. ௰௧.


இருந்த மீனத்தில் தானே இந்திரி யென்னும் பேயே.
வருந்து மெய் வீக்கமாகி மலரவே விழுந்து சோர்ந்து
திருந்தவும் மெலியுண்ணுமல் செய்திடல் கோழியோடு
பொருந்த நெய் சோறும் பூவும் புத்தடமுன்னில் வையே. ௰௨

அர்ஷ்டம் வருட பிருதி.


பிள்ளை பிறந்த இரண்டாம் நாள் இரண்டாம் மாதம்
இரண்டாம் வருடம் ஊத்திராதியென்னும் பேயனையும்
அது செய்யுங் குணம்:- விக்கிலைக்கும், நிமிரும், வைத்து
ம்புடம், கண் விழியாது பல விகாரஞ்செய்யும்
அதற்கு:- அந்தவர்ண சோறு செய்து புதுச் சட்டியி
லிட்டு பிள்ளை தலையைச் சுற்றி பிடாரி கோவிலில்
வைக்கவும் பின்வரும் 16ம் பக்கத்திலுள்ள எந்திரம்
எழுதிக் கட்டவும். (எந்திரம்-16ம் பக்கம்)




பிள்ளை பிறந்த மேனுபோல் மூன்றுமாதம் மூன்று வருடம் பத்ரகாளியென்னும் பேயணையும் அதுசெய்யுங் குணம் வீரிட்டழுகும், வெதும்பி அழுகும், வாந்தி பண்ணும் வயிர் கழியும். அதற்குப் பலி ஆண் பாவைபண்ணிச் சிக் தினம் தெளித்து, எருக்கம்பூச் சூட உச்சி நேரத்தில் அடவியில் வைக்கவும். அடவியிலிருக்கிற விடத்தை வேர் கொண்டாடக் கட்டவும் இந்த யெந்திரம் எழுதிக் கட்டவும்




பிள்ளை பிறந்த - 4. நாள், 4, மாதம், - 4 - வருடம் இவை
யென்னும் பேயணையும். அது செய்யுங்குணம் வெதும்பி
வுயிர் கழியும். இயர்க்கும், வாந்திபண்ணும் அதற்குப்பலி,
பாலுஞ் சோறும், உழுத்தஞ் சோறும், அஞ்சவர்ணச் சோறு
அடை பருப்பு பலகாரியும் புதுச் சட்டியிலிட்டு மாலி நேரத்தில்
பிள்ளையை மடமேல் வைத்து தீபதூபம் கொடுத்து தலையை
ச் சுற்றி நீர்க்கரையில் வைக்கவும் இந்த எந்திரம் எழுதி
க் கட்டவும்






பிள்ளை பிறந்த - 5-ம் நாள் - 5-ம் மாதம் - 5-ம் வருடம் கொடு
கேடா யென்னும் பேயணையும் அது செய்யுங்குணம் உடம்
பு கடுக்கும் மேலும் கையும் கொந்திருக்கும், நாக்கும்
திணியாது. வாந்திபண்ணும், வயர் கழியும் அதுக்குப்
பலி, மாவாலே பாவை பண்ணி சந்தனம் தெளித்துக்
கோழி பலியிட்டு சிவப்புப்பூச் சூடமாலி நேரத்தில்
ஊருக்கு வடக்கே ஆலமர (மர) அடியில் வைக்கவும் எருமை
க் கொம்பு சீவிப் புகைக்கவும் பின்வரும்
எந்திரம் எழுதிக் கட்டவும்




பிள்ளை பிறந்து - 6 - ம் நாள், - 6 - ம் மாதம் - 6 - ம் வருடம்
கிலியென்னும் பேய் அதனைப் பிடிக்கும், வயிறெடுக்கும்
திரும் பண்ணிக் கிடக்கும், நிமிரும் அதுக்குப் பலி பச்சை
மாங்கிசமும் கொள்ளுப் பருப்பு தீபம் கொடுக்கவும் மாக
நேரத்தில் காளி கோட்டத்தில் வைக்கவும் இந்த எந்திரம்
எழுதிக் கட்டவும்




பிள்ளை பிறந்து - 7 - நாள், - 7 - மாதம், - 7 - வருடம் உத்திரதிவன்
னும் பேயனையும் செய்யுங் கணம் வயர் வலிக்கும் வாதும்
பும் வாந்திபண்ணும் உச்சிக் குழியும் வயரும் உயர்ந்திருக்
கும் அதுக்குப் பலி பாவை பண்ணி சந்தனந் தெளித்து எருக்
கம் பூச் சூடி உச்சி நேரத்தில் நாலு சந்தி கூடுமான இடத்தி
வைக்கவும் எருமைக் கொம்பும் வேப்பிலையும் கோழி இறைச்சி
யும் போட்டுப் புகைக்கவும்.


இந்த எந்திரம் எழுதிக் கட்டவும்




7.6.85

பிள்ளை பிறந்த - 8 - நாள், -8- மாதம், -8- வருடம் முனி
யென்னும் பேயணையும் அது செய்யுங் குணம் இளைக்கும்
யெழுமுலையுண்ணாது, தும்மும், இருமும், திமிரும் அதுக்குப்
பலி பஞ்சவர்ணஞ் செய்து என்று பொரியும் புதுச்சட்டி
யிலிட்டு பிடாரி கோவிலில் வைக்கவும் இந்த யெந்திரம்
எழுதிக் கட்டவும்







பிள்ளை பிறந்த ஒன்பது நாள் — 9-மாதம், 9-வருடம் மாராயி
என்னும் பேயணையும் அது செய்யுங் குணம் தக பிரட்டும்
வாய் நீர் வடியும் கண் மயங்கும், வயிர் கழியும், தும்மும் பல
விகாரஞ் செய்யும் அதுக்குப் பலி வெள்ளைப் பூவும்
வெள்ளைச் சோறும் புதுச் சட்டியிலிட்டு மாலை நேரம் நதிக்
கரையில் வைக்கவும் காக்கை எச்சம் மயில் காக்கை எச்சம்
கிழுதைலத்தில் போட்டுப் புகைக்கவும் மடக்கொத்தான் வேர்
இலிசமாடாக் கட்டவும்




பிள்ளை பிறந்த-10-நாள், ~~மக்~~ 10-மாதம், -10, வருடம் விகாரி
யென்னும் பேய்சினையும். இது செய்யுங் குணம், வெதும்பும்,
திகில் நோவும், அழகியுண்டாக்கும் வயிர் கிழியும், பால்
எதுக்கும், தூங்கிக் கிடக்கும் அதுக்குப் பலி புண்ணாக்
கிப் பொட்ட தேன், நெய், பச்சைமாங்கிசம் ஒதிப்பருப்பும்
புதுச் சட்டியிலிட்டு மாலைநேரம் நாலுசந்தி கூடுமன
இடத்தில் வைக்கவும் இந்த யந்திரம் எழுதிக்கட்டவும்



பிள்ளை பிறந்த பதினோரும் நாள் —11-ம் மாதம் —11-ம் வருடம்
மந்திரியென்னும் பேய்சினையும் அது செய் குணம் கண்
ணுறங்காது, சோர்ந்து விழும், கிருத்து-துவரும் திகி
நோவும் பலவிகாரஞ் செய்யும். அதுக்குப் பலி அஞ்சு
வர்ணச் சோறு, இறைச்சியும், பச்சைமாங்கிசமும்,
பச்சைப் பாலும் புதுச் சட்டியிலிட்டு மாலை நேரம்
அடவியிலிருக்கிற விடத்தரை
அடவியில் வைக்கவும் இந்த எந்திரம் கட்டவும்
பின் வேர் குளிசமாகக் கட்டவும்



பிள்ளை பிறந்த -12-ம் நாள், -12-ம் மாதம், 12ம் வருடம் அம்பட்ட
என்னும் பேய்சினையும். அது செய்யும் குணம் நாக்குத்தடக்கும்
வைதிரி போடும், வயர் கிழியும், அடும். அதுக்குப் பலி; உதிரம்
சோறு புது அகலிலிட்டு கிளி கோட்டத்தில் வைக்கவும். இதற்
குக் கிளா வேரு அவர் வேரு குளிசமாகக் கட்டவும் எந்திரம்
எழுதிக் கட்டவும். பாலவாகடம் முற்றும். சுப்ரமண்யக் கடவுள்துணை



குளிர்ச்சி எண்ணை

புளியாரை, கூத்தன் குதம்பை, வில்வ இலை, மணத்தக்காளி
இலைச் சாறு வகையொன்று 400 மில்லி அளவு. ஆக 1-600
சன்னலவங்கப்பட்டை கிராம் — 10, ஏலம் கிராம் - 10, அதிமதுரம்
கிராம் — 10, வெந்தயம் கிராம் — 10.
நி. எண்ணை மில்லிலிட்டர் 1-600, சாறு எண்ணை கலந்து, வெந்தயம்
தவிர மற்ற சரக்குகளாய் பசும்பால் விட்டரைத்துக் கலக்கி
மெழுகுபதமாய் வடித்து இறக்கியபின் வெந்தயம் தூள்
செய்து எண்ணையில் போட்டு உபயோகிக்கவும்

குளிர்ச்சி எண்ணை.

கடுக்காய் கிராம் — 35, கருஞ்சீரகம் கிராம் - 35, வெட்பாலை-
அரிசி - கிராம் 35, பச்சைமஞ்சள் கிராம் - 18, கார்
போக அரிசி கிராம் — 35 விளக்கெண்ணை மில்லிலிட்டர் 1-600 குறிஞ்சா
இலைச் சாறு மிலி 400 மெழுகுபதமாய் வடித்து தேய்க்கவும்

[illegible]பால் எண்ணை

விளக்கெண்ணை லிட்டர் மிலி — 1.600, [illegible]பால் மிலி - 400, வெங்காயச்
சாறு மிலி - 400, ஓணான்கொடிச் சாறு மிலி 400, சீரகம் கிராம் 10
வெந்தயம் கிராம் — 10, எண்ணை, சாறு, பால் கலந்து சீரகம், வெந்
தயம் அரைத்துக் கலக்கி மெழுகுபதத்தில் உபயோகிக்க
பித்தச்சூடு, கண் வெட்டை, பித்தச்சூடு, பித்தவெட்டை, பித்த
கிணச்சூடு, வாய்வு மேகச்சூடு முதலானதும் தீரும். கைகண்டது.

மேகச் சூட்டுக்குக் கற்பூராதி எண்ணை

விளக்கெண்ணை மில்லிலிட்டர் - 1.600, பிரம்மப்பூண்டு சாறு லிட்டர் 1-600
கிண்டமணி இலைச் சாறு லிட்டர் - 1-600, மின்னி இலைச் சாறு லிட்டர் 1-600
முடக்கொற்றான் சாறு லிட்டர் 1-600, கொட்டைக் கரந்தைச் சாறு
லிட்டர் — 1-600, சங்கிலைச் சாறு லிட்டர் — 1.600, சிங்கம்
குப்பிச் சாறு லிட்டர் — 1-600, சிறுப்படைச் சாறு - 1.600, விஷ்ணு
மிளகுச் சாறு லிட்டர் — 1600, தேங்காய்ப்பால் லிட்டர் - 1600

வெங்காயச் சாறு லிட்டர் — 1.600, எலுமிச்சம் பழச் சாறு லிட்டர் — 1.600, பரங்கிப்பட்டை கிராம் — 35, கடுக்காய் கிராம் — 35, கடுகுரோகிணி கிராம் — 35, கருஞ்சீரகம் கிராம் — 35, கிம்பிசின் கிராம் — 35, எண்ணெய், தேங்காய்ப் பால், சாறு வகைகள் அத்தனையும் கலந்து கடைச்சரக்குகளையும் இடித்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக்கொண்டு இரசகர்ப்பூரம் கிராம் — 35 பொடித்துக் கலந்து உபயோகிக்கவும். இச்சாபத்தியம்.

— கிரப்பான் எண்ணெய் —

சிறுகீரை வேர் கிராம் — ~~..~~ 70, மொசுமொசுக்கைச் சாறு — 200 மில்லி, வெரிஞ்சிச் சாறு 200 மில்லி, பொடுதலைச் சாறு 200 மில்லி, கோழியவரை இலைச் சாறு 200 மில்லி, மெருகன் கிழங்கு கிராம் — 35, சத்திச்சாரணை வேர் கிராம் 70, வசம்பு கிராம் — 70, பூண்டு கிராம் — 70, விளக்கெண்ணெய் லிட் 1.600 இற்கவகை இடித்துத் தாள் எண்ணெய், சாறு இரண்டும் கலந்து செய்து போட்டு பதமாய்க் காய்ச்சி உபயோகிக்கவும்.

— ஊறல், கிரப்பான் ஆறா — மேகத்துக்கு எண்ணெய் —

விளக்கெண்ணெய் லிட்டர் — 1.600, அருநொடைச் சாறு லிட்டர் 1600 கிருணைச் சாறு லிட்டர் — 1.600, பூவரசம் பட்டைச் சாறு — 1.600 நுணையிலைச் சாறு லிட்டர் — 1.600 நந்தப்படை சாறு விட்டு பாகுபதத்தில் வரும் சமயம்: இலிங்கம், கிராம் 8, இரசகற்பூரம் கிராம் — 8, வாளம் கிராம் — 8, இது மூன்றும் சுத்தம்பண்ணிப் பொடிசெய்து எண்ணெயில் போட்டு நாம் மெழுகு பதத்தில் இறுகுடனே வடித்துக் கொடுக்கவும். மூன்று 18 நாள் உப்பில்லாப் பத்தியம் சகல ஊறலும் தீரும் கண்டது.

ரோகத்தைக் கொட்டைக்கரந்தை போட்டு உருக்கவும். உருகிப்
போகும் அதை எடுத்து அதின் சார் விட்டரைத்து ஐந்தும்
போடவும் பற்பமாகும்.

— குறிஞ்சா எண்ணெ. —

விளக்கெண்ணெ லிட் — 1.600, குறிஞ்சா இலைச்சார் லிட்டர் 0.800
கோழி அவரை இலைச்சார் லிட்டர் — 0.800, வில்வ இலைச்சார் லிட் 0.800
வல்லாரைச்சார் லிட் 0.800, பசுமஞ்சள் சார் லிட், 0.800, வெங்காய
ச்சார் சேர் 0.800, எலுமிச்சம்பழச்சார் 0.800
அரைமருந்து:- கருஞ்சீரகம் கிராம் — 18, கார்போகரிசி கிராம் — 18
கடுக்காய் கிராம் — 18, வறுத்து மென்மை
கடுகுரோகிணி கிராம் — 18, குரசாணி ஓமம் கிராம் — 9
யாய்ப் பொடித்து, சதகுப்பை கிராம் — 9,
வெட்பாலை அரிசி கிராம் — 9, செண்பகப்பூ கிராம் — 9, வெந்தயம்
கிராம் — 9, சீரகம் கிராம் — 9, வறுத்து மென்மையான பொடியாக்கி
எண்ணெயும் சார் வகைகளும் கலந்து அரக்குகள் பொடித்துப் போ
ட்டுக் காய்ச்சி இறக்கி வடித்து வைத்துக் கொண்டு.

உபயோகமுறை :- எண்ணெ ஒரு கரண்டி, எலுமிச்சம்பழச்சார்
1/2 கரண்டி, பசுவின் பால் 1/2 கரண்டி இப்படிச் சேர்த்துச்
சாப்பிடவும்.

தீரும் நோய் :- கண்ணச் சூடு, கர்ப்பச் சூடு, மேகச் சூடு, வெட்டை
ச் சூடு இவைகளுக்குக் கொடுக்கவும்.

— சூதகவாய்வுக்கு - எண்ணெ —

விளக்கெண்ணெ லிட்டர் 1.600, ஈ.ர வெங்காயச்சார் லிட்டர் 0.800
தேங்காய்ப்பால் லிட்டர் 0.800, எலுமிச்சம்பழச்சார் 0.800
கித்தாலா மடல் சார் லிட்டர் 0.800, காட்டுமல்லிகைச்சார் லிட் 0.800
கோவையிலைச்சார் லிட்டர் 0.800, சதுரக்கள்ளிப்பால் லிட்டர் — 0.800
ஆவின் மோர் லிட் — 0.800 கடுக்காய் கிராம் — 0.35, கடுகுரோ
கிணி கிராம் — 0.35, கிம்பிசின் கிராம் — 0.35 இந்த மருந்தையெல்
லாம் அரைத்து எண்ணெயில் போட்டு மெழுகுபதத்தில் வடித்து.

இருமேட்டை போடவும் (உடைத்து உள்ளே இறக்கவும்)
தீரும் நோய் :- வயிற்றுவலி, அழிமாந்தம், கட்டி, சூலி முதலா
னது தீரும் கைகண்டது இச்சாபத்தியம்.

— இலுமிச்சம்பழ எண்ணெ —

விளக்கெண்ணெ லிட்டர் — 1.600, தேங்காய்ப்பால் லிட்டர் — 1.600
இலுமிச்சம் பழச்சார் லிட்டர் — 1.600, வெங்காயச் சார் லிட்டர் — 1.600
புங்கம் பால் லிட்டர் — 1.600, பரங்கிப்பட்டை கிராம் 0.245
பரங்கிப்பட்டையைக் கியாழம் வைத்துக் கூடச் சேர்க்கவும்
வெட்பாலரிசி கிராம் — 0.9, கருஞ்சீரகம் கிராம் — 9, கார்போகரி
சி கிராம் — 9, இரசகற்பூரம் கிராம் — 8, அரைத்து செய்து பொடிபண்
ணி எண்ணெயில் போடவும் : இச்சாபத்தியம்
கைப்பு - புளிப்பு தள்ளவும். கைகண்டது.

— குமட்டிக்காய் எண்ணெ —

விளக்கெண்ணெ லிட்டர் — 1.600, நிஞ்சமெறிக்கான் வேர்பட்டை
-15- கருஞ்சீரகம் கிராம் — 70, பூண்டு கிராம் .70-, வசம்பு கிராம் - 70
இந்த மருந்தையெல்லாம் அரைத்து எண்ணெயில் போட்டெரிக்கவும்
உப்பில்லாப்பத்தியமாக ஐந்து நாள் சாப்பிடவும் ஆறும் நாள் உப்
பு வறுத்துச் சேர்க்கவும்.

— மாந்த எண்ணெ —

விபூதி இலைச்சார், பின்னி இலைச்சார், முன்னை இலைச்சார் இந்
த மூன்று சார்களும் லிட்டர் — 1.600 எண்ணெ லிட்டர் — 1.600
கருஞ்சீரகம், மிளகு, வெள்ளைப்பூண்டு, வசம்பு வகைக்கு கிராம் — 5
பரங்கிப்பட்டை கிராம் — 10 எண்ணெ சார் கலந்து மருந்துவ
கை கூட்டிப் போட்டு பதமாய் வடித்துக்கொள்ளவும்
அக்கு கியாழங் கூட்டி காக்கரட்டான் அமுக்கிராகிழங்கு?
(இது என்னது?) இதற்குமேல் விபரம் இல்லை.

தாளகம், இரசம், கெந்தகம், மனோசிலை, பூண்டு வகைக்கு 2 கிராம்
வாளம் கிராம் — 1 வேப்பெண்ணெ 400 மில்லி எண்ணெயை
அடுப்பிலேற்றி முன்னவற்றை சேர்த்து அரைத்துக் கலக்கி
கருகிய வாடை வாராமல் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்

— மேகத்து எண்ணெ —

வெள்ளறுகு, கொட்டைக் கரந்தை, ஆகாசத்தாமரை, சின்னியிலை
விழுதியிலை, உழலாத் திப்பட்டை, உழலாத் தியிலை, கையாந்தகரை
விர்மாரட்சதன், இருசைடுப்பட, பிரம்மிப்பூண்டு இவைகள்
சார் சமன் கொடுவேலி இலை ஒருபிடி அம்மி போடவும்
எண்ணெ லிட்டர் — 1.600 ஆதியம் (?) கிராம் — 8.

— வாய்வு எண்ணெ —

விளக்கெண்ணெ லிட்டர் 0.800, தேங்காய்பால் லிட்டர் 0.800
வெங்காயச் சார் லிட்டர் 0.800, பழச்சார் லிட்டர் 0.800, குமரிச்சார்
லிட்டர் 0.800, காட்டுமல்லிகைச் சார் லிட்டர் 0.800, காட்
டாமணக்குப்பால் (எருக்கம்பால்) மில்லி - 0.200, கடுக்காய், கடுகு
ரோகிணி, கிம்புரி விதின் வகைக்கு 0.35 கிராம் வறுத்துப்பொ
டித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

~~தேவாரப் பதிகம் பணவிட்டாகம்~~
~~இதை எழுதவில்லை.~~

தாழங்காய்த் தயிலம் (கவி சீர் சரியில்லை. இருப்பினும் ~~[illegible]~~ எழுதப்படுகிறது)

நிதி பெறும் தாழங்காய்த் தயிலந்தன்னை
நேர் வடக்க வகை தேறு கருவதாமை காங்காயின் சார்
லிட்டர் 1.600 (படியொன்னது.)
இசமான பசுவின் பால் (படி 1/2) லிட்டர் 0.800
அதற்கடுத்தரட்டுல் உறை தடையாகவே உள்ளது } நெ. எண்ணெ லிட் 0.800
கோரைக்கிழங்கு, சித்தாமுட்டி வேர், பேராமுட்டி வேர், நன்னாரி வேர்
விளாமிச்சம் வேர், அதிமதுரம், சதகுப்பை, ஏலம், பச்சிலை.

வேலம் பிசின், மரமஞ்சள், வெட்டி வேர், பூலாங்கிழங்கு
மஞ்சள், கஸ்தூரி, கோட்டம், அரத்தை, பேரரத்தை, சந்தனம்
சடாமாஞ்சில், தேவதாரம் வகைக்கு 10 கிராம் வீதம் கடைந்து
கல்கம் செய்து முன் எண்ணெய், பால் சாறு இவைகளில் போட்டு.
பதமாய்க் காய்ச்சி சிரசில் முழுகி வர மூன்றுநாள் வட்டம் முழுகி வர
மேகசூடு, முழங்கை, முழங்கால் பெருத்திருப்பது மாறும் தாது
விருத்தி உண்டாம், காய்ச்சல், இருமல், குன்மம், கண்படலம் மற்று
ம் மேக நோய்கள் குணமாகும்.

அல்லி எண்ணெய்.

விளக்கெண்ணெய் லிட் - 1.600, வெங்காயச் சாறு லிட் .0.400
குமரிச் சாறு லிட் 0.400, வல்லாரைச் சாறு லிட்டர் .400, வில்வ
இலைச் சாறு லிட் . 0.400, கோழி அவரைச் சாறு லிட் .400, எலுமி
ச்சம் பழச் சாறு லிட் 0.400, விடத்தேர், சம்பூரா வேர், இரு
கிராந்தி சோரி வேர், கர்மொச்சி வேர், வகைக்கு கழஞ்சு
வாயழவு விழுது அரைத்துப் போடவும்; சீரகம், கடுக்காய்
கிராம் போகி அரிசி வகைக்குக் கிராம் - 0.9; கிச்சிலிக்
கசகசா, வெந்தயம் வகைக்கு கிராம் 0.4 வறுத்துப் பொ
டித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்

- கொட்டை எண்ணெய் -

விளக்கெண்ணெய் லிட் . 1.600 சேங்கொட்டை . 20 கிராம்
கிராம் - 8. சூடம் கிராம் . 8. பறங்கிப்பட்டை கிராம் 0.9
கொட்டையை நறுக்கிப் போட்டு பதத்தோடே காய்ச்சி
வடித்துக் கொண்டு ஐந்துநாட்கள் கொடுக்கவும்
இச்சாபத்தியம் மேகம் ஆக்கும் கட்டாது இவைகளுக்
கும் கொடுக்கவும் கைகண்டது.

கொம்மட்டக்காய் பத்துக்கொண்டுவந்து அட்டு பொடியாய்
அரிந்து, சட்டியிலே போட்டு வெங்காயம் கிராம் 280
பொடிப் பொடியாய் அரிந்து கூடப் போட்டு நன்றாக அவிய
வேகப் போட்டு எடுத்துப் பிசைந்து பிழிந்து சாறு மிலி 400
இதற்கு விளக்கெண்ணெ லிட்டர் 0.800 விட்டு எரித்து
மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்
உபயோகவிபரம் :- பிள்ளைகளுக்கு காசெடை கொடுக்கவும்
பெரியவர்களுக்கு :— இரண்டுகாசெடை கொடுக்கவும்
நன்கு பேதியாகும் — மோரும் சோறும் கொடுக்கவும்

— பெரும்பாட்டுக்கு எண்ணெ —

ந.எண்ணெ மிலி- 250 (சேர்-வல) குங்குமப்பூ கிராம் - 4¼,
(விரா கன்-கால) வறுத்துப் பொடி செய்து எண்ணெயில்
குழப்பி வேளைக்கு மிலி-50 (சேர் ல) கொடுக்கவும்

பத்தியம் :— இச்சாபத்தியம்
பசுவின் மோர் நெய் கூட்டலாம்; கைப்புளிப்பு தள்ளவும்
பத்தியமாய் இருக்க பெரும்பாடு நன்குணமாகும் கை
கண்ட முறை.

— கிழஞ்சி எண்ணெ —

வெங்காயம் கிழஞ்சியில் விட்டேயாக்கு
விளக்கெண்ணெ ஓர்படியில் சித்தியானேன்
சிங்காரத்தந்தி விரைபல மேகோல்தான்
சிவன் விந்து கல்ப்பூரம் பலமறைக்கால்
பாங்காகக் கொண்டதனையுண்டாயானால்
பக்கமுள்ள ஆறிமுதல் ஆறுவாதம்
தீங்காது குடல் பிரட்டல் விக்கல் குன்மம்
சிலவித யோனிகுத வாதத்திகி
ஒருவிசை யிருவீக்கம் பித்தமலம் உயரம்
அந்தர வாய் வலிதண்டு சிகி.

மூத்திரக் கிருச்சம் பெருநீர்க் கட்டுத் தீருதல்
விரிவானபிணி யனைத்துமகன்று போகும்
விளக்கெண்ணெய் கொண்டவர்க்கு விசேடந்தானே.

இதற்கு உறை ஏட்டால் இல்லை:

கிழிச்சி இலை வெங்காயம் சமன் கொண்டரைத்த சார் -800- மில்லி விளக்கெண்ணெய் 1-600 லிட்டர் ரசம் (சுத்தி) -5- கிராம், கற்பூரம் (ரச) கிராம்-5- சேர்த்துப் பொடி செய்து கூட்டப் போட்டுக் காய்ச்சி எடுத்து வைத்துக் கொள்ளவும்:

உபயோகவிபரம்:- இரண்டு அவு காலை மாலையாக 3 நாள் 6 வேளை காலையில் வெறும் வயிற்றிலும் மாலை 6 மணிக்கு இரவு சாப்பாட்டிற்கு முன்னுமாக சாப்பிடவும்

தீரும் நோய்:- விரைவாதம், அண்டவாதம், மலக்கட்டு நீர்கடுப்பு, பாரிசவாய்வு, குடல்வாதம் இவைகள் தீரும்

பத்தியம்:- உப்பில்லாக்கஞ்சி உட்கொள்ளவும்

— கெர்ப்ப நோய்க்குத் தைவேளை எண்ணெய் —

காணப்பா வயித்தியந்தான் கெர்ப்பரோகம்
கடுஞ்சுருக்காய்த் தீருதற்கே கடுமஞ்சள்
தோணப்பா யிந்துப்பு கடுக்காய் விழுதி
தைவேளை நிலவாகை தானே உள்ளி
பாணப்பா வெண்காரம் ஆமணக்கு இலையும்
பரிவாகப் பலமொன்று வகையொன்றுக்கு
தேனப்பா விளக்கெண்ணெய் படி தானென்று
சொல்லவே கொடுஞ்சுருக்காம் அண்டமுதல் புவனமேவாமே

இதற்கு உறை இல்லை (ஏட்டால்)

கடுகு, மஞ்சள், இந்துப்பு, கடுக்காய், விழுதி, தைவேளை நிலவாகை, உள்ளி, வெண்காரம், ஆமணக்கு இலை

11.6.85

முன் கூறிய பத்துச் சரக்குகளும் வகையொன்றுக்கு கிராம்
—35, வீதம் எடுத்து விழுதியிலை, தைவேளை, நிலவாகை, உள்ளி
ஆமணக்கிலை இவ்வைந்தையும் நன்கு அரைத்து, கடுகு,
மஞ்சள், இந்துப்பு, கடுக்காய், வெண்காரம் இவற்றைப் பொ
டிக்கும் போது வெண்காரத்தைப் பொரித்துப் பொடிக்கவும்
விளக்கெண்ணெய் லிட்டர் — 1600 எடுத்துமேல் இலைகளையும்
சரக்குகளையும் கலந்து கலக்கி அடுப்பேற்றி மெழுகு
பதமாகக் காய்ச்சி இறக்கி வடித்துவைத்துக் கொள்ளவும்

உபயோகவிபரம் :— 5 முதல் 10 கிராம் வரை சரீர பலம்
கண்டு வீட்டுவிலக்கமான முதல் நாள் முதல் மூன்றுநா
ட்கள் காலையில் மட்டும் கொடுக்கவும்
தீரும் நோய் :— சூதக வயிற்றுவலி குணமாகும், குழந்தையில்
லாதவர்களுக்குக் கர்ப்பந்தரிக்கும்
பத்தியம் :— இச்சாபத்தியம்

— சிந்தாதி எண்ணெய் —

தின தந்த ஞதந்த - ஞஞ அயிந்து குரவனைப் போற்றி
அருள் ஆனந்த சிந்தாதி எண்ணெயைப் பாட
தொந்திக் கணபதி காப்பாம்; மிகத்தொழுது பணிந்து
வணங்கிடுவோமே

சித்தாமி மஞ்சளுங் காயம் நல்ல
~~[illegible]~~ கடுஞ் சீரகம் திப்பிலி இந்துப்பினோடு
சித்திர வெங்காரம் கடுகு (நீர்) ஓரொன்று
இதில் சேர்க்கும் சரக்குவகை ~~சொல்லுகிறேன்~~ ஏட்டில் பக்கம் தடமாற்றம் அறியலாகு.
~~கொடுக்கவிப்பால் காந்தி வாரேன்~~
~~வார்த்து நீ எரித்த எண்ணெ குடுக்ககோலும்~~
~~மாதவிடை மூன்றும் நாள் முழுகும் போது~~
~~கொத்துவ பத்தியந் தானின்றுமாகி~~
~~கிடனை அமைன்ற வாய்வு போம் ஆறுமாதம் கர்ப்பமுண்டாம்~~

பத்தியாய் வெளியின் சார்படி எட்டு
தேங்காய் பால் எட்டுடனெண்ணெய் நாழி
இத்தியாய் மெழுகுபதத்தில்
இதைச் சேர்த்தவெண் முன் மருந்திட்டு வடித்து
பத்தியமாக மூன்று காஞ்சி
பாதமாய் எண்ணெயை மேலிக் கொடுக்க
முத்தும் பெரும்பாடு ரோகம்
முதிரும் பயித்தியம் பிரமியஞ்சூலி
தேத்துவாய் ஆம்பலுங்கட்டை
நில்ல செல் கட்டை கல் கட்டை நீர் கட்டையோடும்
சொல்கிறேன் கொடக் கள்ளிப் பால் காஞ்சி வாரேன்
வார்த்துநீர்த்தனெண்ணெ குடுக்கக் கேளு
மாதவிடாய் மூன்று நாள் முடுகும் போது
காத்துவ பத்தியந் தானொன்றுமாகா கடனையென்ற
வாய்வு போம் ஆறுமாதம் கொப்பமுண்டாம்
சாத்துவோம் சதாசிவத்தினலேயிந்த
சண்டாளக் கிசடுக்குச் சாத்தவேண்டாம்
குத்தகே வருகுமடா சித்தமுத்தும்
பயித்தியமுத்து மேகம் இருபத்தொன்றும் தீருமென்றே
தினத்திந்தனதந்த.

வாய்வுகளுக்கு கொற்ப கோடாலி எண்ணெ.

விளக்கெண்ணெ லிட்டர் 6. 400
முடக்கொத்தான் சார்லிட் 3. 200
சரக்கொன்றைச் சார் லிட். 3. 200
கடுகுரோகிணி கிராம் -70- அரைத்துப் போட்டுக்கலக்கி
மெழுகுபதத்தில் வடித்துக் கொண்டு சாம்பிராணி
காசுக்கட்டை இந்துப்பு வெங்காரம் வகைக்கு -8- கிராம்
பொடித்துப் போட்டு குப்பியிலடைத்து வைத்துமேலக்
கிராணி வாய்வுக்குக் கொடுக்கவும்.

இலுமிச்சங்காய்

ஆமணக்கெண்ணெய் லிட்டர் 0.800
இலுமிச்சங்காய் 10, பொட்டலுப்பு 4, கல்லுப்பு 4
இந்துப்பு 4, கெந்த பொடியுப்பு 4, வளையலுப்பு 4, லோகசெந்தூ
ரம் வகைக்கு கிராம்.18 இலுமிச்சங்காயை நான்காய்
பிளந்து சரக்குகளைப் பொடிபண்ணி காயில் வைத்து
எண்ணெயில் அவிக்கவும் வேளைக்கு ஒரு துண்டு சாப்பிடவும்
(என்ன நோய்க்கு சாப்பிட வேண்டும் என்பது குறிப்பிடப்படவில்லை)

வெள்ளை மெழுகு.

இரசம் கிராம் – 4, பூரம் கிராம் – 8, வீரம் கிராம் – 8, வெங்கா
ரம் கிராம் – 8, துத்தம் கிராம் – 8, நாகமல்லிகைச் சாறு அரைப்பு
இளநீர் அரைப்பு ஒட்டல் அருக்குக் கொடுக்கவும் மெழுகாகும்
தீரும் வியாதி :- புண், கட்டி, கிரந்தி தீரும் கைகண்டது.

— கஸ்தூரி மெழுகு. —

கஸ்தூரி கிராம் – 4, இரசகற்பூரம் கிராம் – 4, சாதிலிங்கம் கிராம் – 4
முலைப்பால் கிராம் – 8, விட்டு அரைக்கவும் தேன்விட்டு கிளக்
கவும்; சன்னி பதிமூன்றுக்கும் அனுப்பானமறிந்து கொடுக்கவும்
மிளகு பிரமாணம், தேன் இஞ்சி சாற்றில் கொடுக்கவும்.

— அயமெழுகு. —

அரப்பொடி கிராம் – 35, காந்தம் கிராம் – 18, இது இரண்டும்
சுத்திபண்ணி சூரணம் செய்து மேல் அனுப்பானம்.
சுக்கு கிராம் – 8, மிளகு கிராம் – 8, சீரகம் கிராம் – 8, கடுக்காய் கிராம்
– 8, இந்துப்பு கிராம் – 16, அரிசித்திப்பிலி கிராம் – 8, நாவல்பட்டை
ச்சாறு பிழிந்து சரக்கெல்லாம் இடித்து சட்டியில் போட்டு
சாறு சட்டியில் விட்டு அதன் கூட பனைவெல்லம் கிராம் – 140
போட்டு, தேன் சேர்த்துப் பிசைந்து, ஒருவேளைக்கு மாசிக்காய்
வீதம் கொடுக்கவும் எந்த உட்டணமும் தீரும்; இச்சாபத்தியம்.

இரசசெந்தூரம் கிராம்—12, இரசகற்பூரம் கிராம்—12,
லிங்கம் கிராம் ——24, வீரம் கிராம்-4. சுக்கு, மிளகு, திப்பிலி
வகைக்குக் கிராம்-53, எல்லாம் கல்வத்திலிட்டு நீர்காரம்
விட்டு அரைப்பு சாமம் இரண்டு—(6 மணி நேரம்)

மூலங்கால் பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, பார்சுவாய்வு இவை
களுக்குக் கொடுக்கவும் இச்சாபத்தியம்

— வீரமெழுகு. —

வீரம் கிராம் - 4, பூரம் கிராம்-4, லிங்கம் கிராம்-4, சுக்கு, மிளகு
திப்பிலி வகைக்குக் கிராம்—8, நீர்காரம் விட்டு 3 மணி நேரம்
அரைத்து தேன் விட்டு இடக்கவும் இச்சாபத்தியம்.

— காந்தமெழுகு —

பூரம் கிராம் — 8, லிங்கம் கிராம் — 8, வீரம் கிராம் —4, இரசசெந்தூரம்
கிராம் — 8, வெடியுப்பு கிராம்— 8, வெங்காரம் கிராம் — 8, காந்தம்கிராம்
-8, சுக்கு கிராம்-8, மிளகு கிராம்—8, திப்பிலி கிராம்-4, கடுக்காய்
த்தோல் கிராம் — 8, கழற்சிப்பருப்பு கிராம்— 8, வாளம் கிராம்-48
அரைப்பு மாம்பழக் கள்ளி தேன் விட்டு—(?) இளக்கி இடக்க.

வீரமெழுகு.

பொன் ஆவிரைத் தயிலம் அடுக்க 3 மணி நேரம் (சாமம் ஒன்று)

— சாரமெழுகு —

நவச்சாரம் கிராம்—16, இந்துப்பு கிராம்— 16, நந்திவிரை கி-
ராம்— 8 (நேர்வாளம்) எருக்கம்பாலால் மூன்றுமணி நேரம்
அரைத்து, தொடரக்கள்ளிச் சார்விட்டு 3 மணி நேரம் அரைக்கவும்

—— பண்ணைமெழுகு

லிங்கம் கிராம் — 4, பூரம் கிராம் — 4, இரட்டம் கிராம்-4, பால்
சாம்பிராணி கிராம்-4- இந்த நான்கு சரக்குகளும் கல்
வத்திலிட்டுப் பொடித்து அரைக்க மெழுகாகும்
தீரும் வியாதி:- சின்னி-13, சிரம்-64, விஷபேதி வாந்தி, விக்கல்
முதலானது தீரும், ஒரு வேளைக்கு இரண்டு மிளகு திட்டம் கொ
டுக்கவும் கைகண்டது அனுபானம் தேனில் உருண்டையைப்
பிரட்டி கொடுக்கவும்.

இரசம், கெந்தகம், சாதிலிங்கம், வெங்காரம், காயம், திப்பிலி வகைக்கு கிராம் — 4, கிருணிகிராம் - 2 இரண்டுவகையும் சுத்திசெய்து அரைப்பு சங்கஞ்சார் கொம்புத்தேன் எரிகுடை, மாந்தக் கழிச்சல், வாந்தி வாய்வுகள் தீரும் கொடுக்க.

— இரச - மெழுகு. —

இரசம் கிராம் - 6, பொரி - 12 எண்ணம், கிராம்பு — 16 எண்ணம் இவைகளை தேன்விட்டரைத்து மெழுகுசெய்துகொள்ளவும் மேகசொறி, மேகரணம் இவைகளுக்கு கொடுக்கவும் இச்சாபத்தியம்.

— பஞ்சசூதம் —

வீரம் கிராம் — 4, இரசம் கிராம் — 4, இரசசெந்தூரம் கிராம் — 16, லிங்கம் கிராம் — ~~2~~4, பூரம் கிராம் — 32.

— திருமூர்த்தி —

இரசம், பூரம், லிங்கம், வகைக்கு கிராம் — 4

— வெறுப்பு சண்டமாருதம் —

காந்தம் கிரா — 8, அரப்பொடி கிராம் — 16, வீரம் கிராம், 4 பூரம் கிராம் — 4, சாதிலிங்கம் கிராம் — 4, இரசம் கிராம் - 4
ஆட்டால் வெறுப்பு —
(இது. செய்முறை ? ப லோகமுறை வியாதி நீக்கம், ஆட்டல் எழுதவில்லை)

— தாளிசாதி புட்டு —

தாளிசபத்திரி கிராம் — 35, சுக்கு கிராம் — 105, மிளகு கிராம் — 35, திப்பிலி கிராம் — 35, திப்பிலிமூலம் கிராம் — 70, செவியம் — கிராம் — 35, சிறுநாகப்பூ கிராம் — 35, சீரகம் கிராம் — 35, ஏலம் கிராம் — 9, கிராம்பு கிராம் — 9, இலவங்கப்பத்திரி கிராம் — 35, இலவங்கப்பட்டை கிராம் — 9, விளாமிச்சவேர் கிரா — 9 பனைவெல்லம் ~~கிராம்~~ 1 கிலோ 50 கிராம் சரக்குகளைச்சூரணம் செய்து பாகுபதத்தில் லேகியமாக்கிப் புட்டுவைக்கவும்

12.6.85. கர்ப்பூராதி - மாத்திரை.

கோமயில் கிராம் - 9 (கர்ப்பூரம்) வைத்திலு; மிளகு-16, லவங்கம்-10

இது சூரணம்

கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், காசிக்கட்டி
கிந்தக் கிராம்பு, வெங்காரம்.
(பல மருந்துகள் செய்முறை, பிரயோகவிபரம், தீரும் நோய் பற்றிக் கூறவில்லை.)

- பட்டுக்கருப்பு -

பூரம் கிராம் - 20, ஆகாசமேலிகை சத்தி மேலே தீண் சத்தி நல்லெண்ணெயில் நினைத்து X எடுத்துப் பொடிபண்ணிக் கொள்கிறது.
சுக்கு, மிளகு, திப்பிலி கோழிமுட்டை வெண்கருவிட்டுக்கிண்டி பனைவெல்லம் போட்டுக்கிண்டி மெழுகுபதத்தில் எடுத்து அதற்குள் வைத்துக் கொடுக்கவும்.

- நாகபற்பம் -

திருக்கிண் நாகம் வாங்கி இலுப்பை எண்ணெயில் -7- முறை உருக்கிச் சாய்த்து குருகட்டி (குடியோட்டி) ஆண்டுச்சாற்றில் இரண்டாயில் போட்டுச் சுருக்கிட மாண்டு போகும் மேற்படி சாற்றிலிட்டு அரைத்து வில்லை தட்டி இரண்டுதரம் புடம் போட்டு கல்வத்திலிட்டு அரைத்துக் கொண்டு வயறு கடுப்பு, கிறுணி இதுகளுக்கு; தேன், நெய், வெண்ணெயில் கொடுக்கவும்.

மலம், சலம், கட்டிக்கொண்டு உப்பிசம் பிறந்தால் மருந்து.

மேற்படி நாகபற்பம் கைதியளந்து அரமான கழிச்சலுக்கு வெந்நீரில் கொள்ளவும்; வயர் கடுத்து ரத்தமும் சீதமும் கழிச்சலுக்கு எருமைத்தயிரில் கொள்ளவும் கொஞ்சம் கொஞ்சமாய்க் கட்டும்.

நொச்சிக்கொழுந்து பிடி ஒன்று, வேலிப்பருத்திக் கொழுந்து பிடி ஒன்று குப்பைமேனிக் கொழுந்து பிடி ஒன்று, முடக்கத்தான் கொழுந்து பிடி ஒன்று வெள்வெங்காயம் பூடு - 3 இது எல்லாம் சட்டியில் போட்டு விளக்கெண்ணெய் விட்டுப் பொரித்துத் தின்னவும் வெந்த எண்ணெயும் உள்ளுக்குக் குடிக்கவும்.

தேங்கிய கடல் தேங்காய் நாலாந்
திறமுடன் வாலாம் நாலாம்
ஓங்கிய காயம் ரெண்டாம், உத்தது காந்தம் ரெண்டாம்
மேவியவீரம் ஒன்றாம் வேண்டியவெங்காரம் ரெண்டாம்
பங்குடன் பழச்சாற்றிலே பதனமாயரைத்து வையே.

வைத்தபின் உரைக்கெல்லாம் மகோதிரம் பீரம்பல்
சித்தியும் விக்கல்வாந்தி சகலமும் எரிச்சலாகும்
பத்தியமாகச் சொன்னேன், பரமனுரைத்தவாறே

— சகலவிசத்துக்கும் குழம்பு —

வெள்ளைப்பாஷாணம், இரசம், கெந்தகம், மனோசிலை, பெருங்காயம் துருசு, நிம்பவிதை வகைக்கு — கிராம்.4 — ஆகசரக்கு 7 — கிராம் — 28.

இவை வாலாம் ரெட்டைப்பு கட்டி (56 கிராம்) எருக்கம்பால் விட்டரைத்து மறுபடி நிம்பஎண்ணெய் அரைப்பு குழம்பு போலஎடுத்து சிமிழிலடைத்துக்கொண்டு குன்றியெடை வெற்றிலையில் வைத்துக் கொடுக்கவும். சகல விசமும் தீரும்.

மகோதர சடாட்சரக்குழம்பின் தொடர்ச்சி (ஏடுமாறியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு எழுதப்பட்டது (மருத்துவர் T. தேவசகாய 12.6.85)

"மந்தமொடுவெதுப்பான தேகமெல்லாம்
வண்டுபோல் சுருக்குமடா மண்டலத்தில்
அந்தமாம் மகோதிரங்கள் பிலிகைவாய்வு
அப்பனே சோகையொடு கிராணி மேலும்
வெந்தமாம் உடம்பெரிவு எ.ளா இரைப்பு
பொருமலுடன் பீனிசங்கள் யிரைச்சல் தீரும்
பக்குவமாம்பத்தியங்கள் காரகங்கள் திண்ணு
பரக்குமா மண்டலத்தில் தீருந்தானே.

கருவி யோடிரதம், நாபி, கசைந்தகெந்தகமோ, சுக்கு
மருவிய சிலை, வெண்காரம், ஆவதுவகைக் கோரொன்று
திருவிய மிளகோரெட்டு, சார்ந்த நற்கல்லிரெட்டு
பருவமா நாளேழு பதமுடனரைத்திடாயே.

அரைத்தபின் பொட்டு ~~க~~ கருப்பாம் அனுப்பான விசேடந்தன்னில்
வருத்தியெண்பத்து வாதம் வருந்திய பிணிகளெல்லாம் (தாளும்)
இருத்திய இபதய்யம் இயம்பிய சுவாசகாசம்
சின்னியும் மேலரோகம் சிலுமுடன் மகோதிரங்கள்
வன்னிய அரவும் தேளும் வல்விசம் புமரகண்டன்
இன்னிய சிவனுரவிழ்தமென்றிசனுருரை செய்தாரே.

— பஞ்ச சூதபல்லாதி —

சீரம், இரசசெந்தூரம், சாதிலிங்கம், வீரம், சேங்கொட்டை வகைக்கு கிராம்—9. இரசகற்பூரம் கிராம்—10 என்று ~~[illegible]~~ ~~[illegible]~~, ~~அவல்பொரி~~ 1லிட்டர், நெல்பொரி 1லிட்டர் கொப்பரைத்தேங்காய், 125 கிராம், ~~[illegible]~~ (அச்சு) வெல்லம் (பனங்கருப்பட்டி) முன் இடைக்கு நேர் இடாப்பு 12மணி நேரம்.

— வாதராட்சத சூரணம் —

இரசம், கெந்தகம், மிளகு, சுக்கு, கண்டந்திப்பிலி, திப்பிலி ஓமம், பேரரத்தை, கருஞ்சீரகம், திப்பிலிமூலம், வெங்காரம் வகைக்கு கிராம்—18.

— நீலகண்டம் —

இரசம், கெந்தகம், லிங்கம், பூரம், இரசசெந்தூரம் வகைக்கு கிராம்—4. வீரம் கிராம்—2

— மாந்த மாத்திரை —

பச்சைகல் (திருநீற்றுப்பச்சை) பூலாங்கிழங்கு அக்கராக்காரம் கோட்டம், ஏலம் வகைக்கு கிராம்–8, வாலம் கிராம்—16, லிங்கம் கிராம்—8.

சுக்கு, மிளகு, திப்பிலி, பூரம், லிங்கம், வகைக்கு கிராம்—4
நேர்வாளம் கிராம்—8, மனோசிலை கிராம்—4

— கெந்தக ரசாயனம் —

சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், ஏலம்
பரங்கிப்பட்டை, சணல் விதை, சித்ரமூலம், சீரகம், வகைக்கு
கிராம்—35, செங்கொட்டை கிராம்—18, (சாணியில் சுத்தி)
கெந்தகம் கிராம்—18 பசுநெய், 200 மிலி, கருப்பட்டி
500 கிராம் (14-பலம்)

— கட்டி புண்ணுக்கு சித்ரமூல மெழுகு —

பூரம் கிராம்—4 சட்டியில் வைத்து, செங்கொட்டைகிராம்-18
நறுக்கிப் போட்டு எரித்து அதுக்குக் கொடுக்கவும், சித்ரமூ
லப்பட்டை ~~பலம்~~ கிராம்—18, பின் பூரக்கட்டியும் பட்டைத்தூ
ளும் இரண்டும் அரைத்துக் காயவைத்துக்கொண்டு பனை
வெல்லம் கிராம்—9, போட்டு இவ்வத்திரைக்க மெழுகாகும்
எடுத்து .5, நாளுக்குச் சாப்பிடவும் பழைய சோற்றி
லிச் சாப்பிடவும்.

— பஞ்சதீபாக்கினி லேகியம் —

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், வகைக்கு கிராம்—35
பனைவெல்லம் சரியிடை நெய் கிராம்—70, தேன் கிராம்—105

— தாளிசபத்திரி லேகியம் —

சுக்கு கிராம்—9, சீரகம் கிராம்—18, சிறுநாகப்பூ கிராம்-18
மிளகு கிராம்—9, கடுகைதீர் கிராம்-18, திப்பிலி கிராம்—18
நெல்லிமுள்ளி கிராம், 18, ஏலம்-கிராம் 18, இலவங்கப்பட்டை
கிராம்-18, கொடிமுந்திரை கிடைப்பாது (இடித்துச்சலித்து
நன்கு அரைத்து) சுண்டக்காய் வீதம் கொள்ளவும் வெட்டை
புண் சிறையடைப்பு கல்லடைப்பு, இரத்தபாரமேகம், சீழ்ப்பிரமேகம்
தீரும்.

லிங்கம் கிராம், 4, பளிங்குச் சாம்பிராணி கிராம் — 4, கஸ்தூரிமஞ்
சள் கிராம் — 4, வெள்ளைப்பூண்டுத் தோல் கிராம் - 4 ஓமம் கிராம்-4
வேப்பம் பருப்பு கிராம் — 4

— நீர்கட்டு மருந்து —

குஞ்சு பொரித்த கோழிமுட்டை தோல் கிராம் — 35, எலிப்புழுக்
கை கிராம் — 35, நாணிக்குஞ்சு மலம் கிராம் — 35 (கோழிக்குஞ்சு)
இந்தப்பற்பம் பணவெடை வெள்ளரி விதை கியாழம் வைத்துக்
கொண்டு இந்தக்கியாழத்தில் கொடுக்க நீர்க்கட்டும், சதை
அடைப்பும், நீர்மாங்கிச, கிர்ச்சினம் இவை தீரும்.

— மண்டைக் குடைச்சல் தைலம் —

குதிரைவாலிச் சாறு லிட்டர் - 1, ஆதண்டை வேர் கிராம் — 35, மாசி
கிராம் — 18, உள்ளி கிராம் — 18, வசம்பு கிராம் — 18, சிதுப்பை கிராம் — 18
வேப்பாடம் பட்டை கிராம் — 18 இதுஎல்லாம் பசுவின் பால் விட்டரை
த்துப் போட்டு பால் விட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து
க் கொண்டு மூன்று நாளைக்கொரு முறை முழுகவும்
பத்தியம், புளி, மோர், புகையிலை ஆகாது.

— ~~பீனிசத்துக்குத் தைலம்~~ — சித்தானந்த வயிரவம்.

இரசம் கிராம் — 5, நாபி கிராம் — 5, டங்கண்† [illegible] (10 கிராம்)
இங்குலம்⊕ — 20 கிராம் தேர்வாளம் கிராம் - 40 கோவிந்தம்Δ இஞ்சி
ச் சாற்றில் ஒரு சாமம் மத்தித்து — (அரைத்து) விரை உளுந்து போல்
சிறுமல் உண்டை செய்து இஞ்சியுஞ் சாத்திலும் - இடாசக்கும்
ரிலும், பல விஷ தாய சுரமும், இசி குடல் வாதமும், பாண்டு
ரோகங் குணமாகும் பகர் விரை வாதமும் பீலிகை குன்மமும்
பாலுலமந்திருமே விரை பத்தியம் தயிர் போசனம் வென்னி
ரில் உத்தலாகும் மேதினியில் மாண்டவர்க்கு சௌரிய சித்தா
னந்த வயிரவத்துவே.

(பீனிசத் தைலம் 39ம் பக்கம்)

⊕ இங்குலம் — சாதிலிங்கம் † டங்கணம் = வெங்காரம் Δ கோவிந்தம் = மஞ்சள்

கிடாரங்காய்ச் சார் லிட்டர் — 1, நல்லெண்ணெ லிட்டர் — ௨, பசுவின்பால் லிட்டர் — ௨. வெந்நீர் — லிட்டர் — ௨.
பச்சிலை, கிச்சிலிக்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், சுக்கு, வால்மிளகு, சண்பகப் பூ, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், ஜாதிக்காய்ப் பால், சந்தனக்கட்டை வகைக்குக் கிராம் — 9

தலைவலித் தயிலம்.

ஜாதி நாரத்தம் பழம், நல்லெண்ணெ சரியெடை விட்டு காய்ச்சி முழுக தலைவலி உடனே தீரும் கைப்பு, புளிப்பு தள்ளவும்

— அரையாப்புக் கட்டி கரைய —

கொடிவேலி வேர்ப்பட்டை, கோசுக்கட்டி, கடுக்காய்த்தோல் களிப்பாக்கு, சுண்ணாம்பு

— வெட்டைக்கு மருந்து —

இரசகற்பூரம் கிராம் — 8, கெந்தகம் கிராம் — 16, மருத்துவெள்ளை ~~[illegible]~~ கிராம் — 32, கற்கண்டு கிராம் — 64 இதற்கு அனுப்பானம் பசுவின் பால், புங்கம் பாலில் கொடுக்கவும்

வெட்டை பிரமியங்களுக்கு மருந்து.

நெ. எண்ணெ மில்லி — 400, கீழாநெல்லிச் சார் மில்லி — 400, எலுமிச்சம் பழச் சார் மில்லி — 400, பசுவின்பால் மில்லி 400, விட்டு எண்ணெயைப் பதமாய்க் காய்ச்சிக் கொண்டு; கல்நார் கிராம் — 24 கற்பூரம் கிராம் — 24, சிலாசத்து கிராம் — 24, மருத்துவெள்ளை கிராம் — 32. இவைகளைப் பொடி செய்து எண்ணெயை அடுப்பில் வைத்து பொடியைப் போட்டு பொங்கும் அந்தச் சமயம் பார்த்து நேரு படிகம் விட்டுக் கலையவும் (ஒருமணி நேரம்) இந்தப்படி ஏழுதிரம் (ஆர்) பசுவின்பால் அரைப்பு — 3 மணி நேரம் அனுப்பானம் நெய், பத்தியம்:— இச் ஒருபுடம் வரட்டி — 20, சாமத்தியம் — பணவிடை இரண்டு (800 மில்லிகிராம்)

— கட்டாத கழிச்சலுக்கு —

மாதுளங்காய் இளங்காய் ஒன்று அறுத்து உள் விரை வாங்கிப் போட்டு, அதில் ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, அதிவிடயம், கிராம்பு குரோசாணி ஓமம், மாங்கொட்டை, புளியங் கொட்டைத் தோடு இதுவெல்லாம் 400 மில்லிக் கிராம் வீதம், (புளியங் கொட்டை தோடு — மாங்கொட்டைப் பருப்பு வகைக்கு 4 கிராம் வீதம்) பொடி பண்ணி.

அந்தமாதிரளங்காயுள் வைத்து மூட ஒரு சீலை கையகலத்தில் சேறு அரைத்துப் பூசி அது கொண்டு சுற்றி நெருப்பில் அவியுமாக வைத்து எடுத்து, சீலை எடுத்துப் போட்டு அந்த மருந்தெல்லாம் காயோடே சேர்த்தரைத்து, அரைப்பு ஒரு வாழைப்பூ இடித்துச் சாறு பிழிந்து கலக்கிக் கொதிக்க வைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று பொழுது கொடுக்கவும். கடுப்புகிரிச்சலும் நிற்கும் — இது பத்தியம்.

— பி.கா. குறை:4, சுவாசம் கீழ், கவுசை காமாலை சூரணம் —

பரியுடன் சிவதை வேரைப் பசுவின் பாலில் வித்துலர்த்தி இடித்து திப்பிலி மிளகு சிறந்திடும் ஓமம் கப்பில்லா ஏலந்தானில வங்கம் கோட்டம் கிராம் 4, கொடியவால் மிளகு, அதிமதூம் சடைக்கீர், அரிசித்திப்பிலியும் இத்தனை சரக்கும் இதுடன் கலந்து இருவேளை கொள்ள தீரும் வியாதி செப்பக் கேளு ~~பி.கா. குறை:4~~ பி.கா, இருமல் இறைப்புடன், சுவாசகாசம் கெண்டை கிள்சை (கவுசை) கீழ்வயத்தெரிவு, மண்டிய இரைச்சல் வாயில் நீர் ஊறல், அக்கினி மந்தம், அனலெரி வாய்வு, மிக்க காமாலை, வீக்கம் சோகை சுத்தியும் தீருமென்று இயம்பினாலே வகைக்குக் கிராம் — 35 — வேர் வகை கிராம் — 70

வெடியுப்புச் சுண்ணம்

ஆட்டுப்பல்லை எடுத்துச் சுட்டுச் சாம்பல் செய்து வெட்டில் வைத்து வெடியுப்பை நடுவில் வைத்து சாம்பலை மேலே வைத்துத் தெரியாமல் மூட மேலோடு மூட 20 எருவில் புடம் போடவும். அந்தச் சுண்ணத்தைப் பனைவெல்லத்தில் கொடுக்கத் தீரும் வியாதி, கீழ்வயத்தில் வலி, சூதகவாய்வு, வயத்தில் கட்டி இதற்குக் கொடுக்கத் தீரும்.

வைவர்யம்

— தேங்காயெண்ணெய் —

தேங்காய் ஆறு பிழிந்து அதில் வெள்ளறுகுச் சாந்து கிராம் — 140 பசும்பால் லிட்டர் 1 தேசி நீர் லிட்டர் 1½ வாளம் கிராம் — 35 எல்லாம் கலந்து எண்ணெய் பதத்து 10 கிராம், நீராகாரத்தில், தேங்காய்ப்பாலில், பசுவின் பாலில் கொடுக்கவும் வயிறு போகும்.

தேங்காய் இரண்டு பிழிந்து கல்லுப்பு 4, கறியுப்பு 4, வெடியுப்பு 4
இந்துப்பு 4, வளையலுப்பு 4, வாலாம் வகைக்கு கிராம் - 8 எண்ணெ
எடுத்து 5-முதல் 10 கிராம் வீதம் இன் அனுபானத்தின் படி கொடுக்கவும்

— இலுமிச்சங்காய் —

இந்துப்பு 4, வெடியுப்பு 4, பொட்டிலுப்பு 4, மேங்கியுப்பு 4, கல்லுப்பு 4, அய்ச்
செந்தூரம் வகைக்கு கிராம் — 9 விளக்கெண்ணெ — 800 மில்லி
இலுமிச்சங்காய் — 10 — காய் ஒன்று 4. ஆக வெட்டி (துண்
டுதுண்டாக அறுக்காமல்) மருந்துகளை அரைத்து காய்களில் வைத்து
எண்ணெயில் வைத்து, அவித்துக் கொண்டு, ஒருவேளைக்கு
ஒருகீத்து கொடுக்கவும். வயிற்றெரிவு, பித்தவாய்வு, குன்மம்
கைகண்டது - இச்சாபத்தியம்.

கிரந்தி, புண், வெட்டை, கட்டி இவைக்கு — நெய்

சின்னியிலை, வறப்பூலா இலை, மணத்தக்காளி இலை, இதுமேன்னும்
இடித்துக் காய வைத்துக் கொண்டு தூள் செய்து தூசம் கிராம்
—16, குப்பைமேனிச் சாற்றிலரைத்து வடையை வைத்து மின்
சொன்ன பொடியைப் போட்டு அரைக்கவும் அரைத்துப்
பசுவின் நெய் மில்லி 800ல் கலந்து அந்திசந்தி ஒருமட்
டைக் கரண்டி சாப்பிடவும் (மேசைக்கரண்டி) பத்தியம்
உப்பில்லா பத்தியம். வாயில் வேகம் கண்டால் நிறுத்தவும்
புண்ணானல் லிங்கப்புகை போடவும்

சின்னி, சயித்தியத்துக்கு — லிங்க செந்தூரம்.

லிங்கம் கிராம் — 10, பூரம் கிராம் - 4 இது இரண்டும் கட்டி
யாக வாங்கிவந்து ஈடன் கிராம் — 35, சாம்பிராணி கிராம் - 4,
இது இரண்டையும் பொடிபண்ணி இரண்டு சாக்கையும் மேடி
தீகொட்டி, பத்தி எரிந்து ஆறினபிறகு, எடுத்துக் கல்வத்தில்
பொடி செய்து வைத்துக் கொண்டு, சின்னி, சயித்தியத்துக்கு
வயிறு போக்குகளுக்கு, ரெத்தக்கழிச்சலுக்குத் தேனில், வெல்
லத்தில், இஞ்சியில், இஞ்சிச் சாற்றில், நெய்யில் யோசித்தறிந்து
செய்யவும்.

— பித்த வெதும்பலுக்கு தீரக ரசாயனம் —

நற்சீரகம் - 400 மிலி, வாங்கிவந்து இளவறுப்பாய் வறுத்து உமிநீங்கிண்டப் புடைத்து உமியில்லாததை எடுத்துக்கொண்டு 245 கிராம் இஞ்சி தோல் சீவிப் பிழிந்து சார் எடுத்துக் கொண்டு, ஐந்து எலுமிச்சஞ்சார் விட்டு வெண்ணெய்போல அந்தச் சாறுகள் விட்டு அரைத்து கல்வத்தில் வழித்துப் போட்டு, ஒரு சாமம் அரைத்து பசுவின் நெய் 200 மிலி சீனி 200 மிலி கலந்து பின் லிங்கசெந்தூரம் கலந்து வேளை ஒன்றுக்கு ஒரு பாக்களவு சாப்பிடவும். பித்தவாய்வு, அக்கினிமந்தம் தீரும்

இந்தக்கோளாறு.

— சொறி சிரங்கு போக —

இரசம் கிராம்—4, —தூரிசு கிராம்—4, வைத்தி 50 எண்ணம் மை போல அரைத்துக் குழப்பி இரண்டுக்கொத்தடவி இடுப்பைக் கட்டி தேய்த்துக் குளிக்கவும் இப்படி மூன்று நாள் குளிக்கவும்

— திணவுக்கு —

சந்தகம் வெண்ணெயில் அரைத்து மேலுக்குத் தடவி சாயங்காலம் இடுப்பைக் கட்டி தேய்த்து (இளவெந்நீரில்) குளிக்கவும். இப்படி மூன்று நாள் குளிக்கத் திணவு அடங்கிப்போம்.

— இரத்தபீனிசத்துக்குத் தயிலம் —

நல்லெண்ணெய் லிட்டர் 1.600, முசுட்டைப்பட்டை கிராம் —35 தும்பை கிராம்—18, மிளகு கிராம்—18, சீரகம் கிராம்-18, வெந்தயம் —10 எண்ணம், இதுஎல்லாம் உரலில் போட்டு இடித்து கலயத்தில் போட்டு எண்ணெயை விட்டு நெல்பானையில் கழுத்துமட்டும் புதைத்து நெல்வெந்த பிறகு எடுத்துக்கொண்டு வத்தானம் பண்ணவும்—(ஆய்த்துக் குளிக்கவும்) 4 பப் 4, கைப்பு 4 தள்ளவும் கைகண்டது.

வெங்காரம் அத்திப்பிஞ்சுப் பழச் சார் விட்டு அரைத்து வெயிலில் வைக்க நீறிப் போம். கடுதாசியில் (பேப்பரில்) வைக்கவும் கிண்டங்கத்திரி மாத்திரம் கியாழம் வைக்கவும். அதில் பண வெடை பற்பம் வைத்துக் கொடுக்கவும் இரண்டு மூன்று விசையாய் நீர் இறங்கும்.

— விரைவாதத்துக்கு —

கழச்சக்காய், பெருங்காயம் சரிகூட்டி அந்திசந்தி மூன்று நாள் கொடுக்கவும் குணமாகும். முட்டையில் சேர்த்து பொரித்துக் கொடுக்கவும். வெள்ளாக்கல், இரசம் ~~கிராம்~~-8 ஓட்டில் வைத்து இரண்டு சாமம் ஊமத்தை வெள்ளைப்பூத்திச் சார் வாங்கி அருக்கிக் கொடுக்கவும் இரசம் கட்டியாகும்

— கெர்ப்பிணி மாத்திரை —

சூதம் கிராம் — 16, கெந்தகம் கிராம் — 16, ஆலம்விழுதுச்சார் விட்டு அரைத்து மாத்திரை உருட்டிக்கொண்டு சட்டியில் ஆற்றுமணல் போட்டுக்கொண்டு அதன் மேல் மாத்திரையை வைத்து, மணல் போட்டுச் சட்டிமூடி ஒருசாதி விறகால் எரிக்கவும் கெர்ப்பிணிகளுக்கு வியாதி கண்டால் தேனிலாவது, இரசமாவது (இஞ்சி) கொடுக்கலாம் கைகண்டது.

— பதினெட்டு எலிகடிக்கும் மருந்து —

சுக்கு கிராம் — 9, மிளகு கிராம் — 9, திப்பிலி கிராம்-9, இதற்குச் சமன் குருக்கை வவ்வால் புழுக்கை கூட்டி இடித்து அதற்கு மூன்று பங்கு புட்டி (கருப்பட்டி) வெல்லம் சேர்த்து இடித்துக் கொண்டு, தினம் 5 கிராம் வீதம் (பாக்களவு) தின்னவும் இப்படி ஏழுநாள், ஒன்பது நாள் தின்கிற ~~[illegible]~~ மட்டும் கொடுக்கவும் உப்பில்லாப் பத்தியம் கூடாமாயிருக்க முட்டி வெல்லம் துவரம்பருப்பு சேர்த்துக் கொள்ளவும்; மறுபத்தியமாய் இருக்கவும் ஓமம் தேய்த்து முழுகவும். பிறகு முக்கூட்டு எண்ணெய் தேய்த்து முழுகவும்.

பதினெட்டு எலிகடியும் தீரும்

லிங்கம் கிராம்—105, பரங்கிப்பட்டை கிராம்-105, நொச்சிக் கொழுந்து கிராம்—105, லவங்கப்பட்டை. கிராம்-45, குங்கிலியம் கிராம்—45, கட...ரிசி கிராம்—45, லவணம் கிராம்-45 புளி கிராம்—45, பனைவெல்லம் கிராம் 45 நாவி-கிராம்-22. கெவுர் கிராம்—22, வெள்ளை கிராம்—22 துருசு கிராம்—22. கிணற்றுநீர் விட்டு அரைத்து தூதுவாங்காய் பிரமாணம் உருண்டை செய்து அநுப்பானம் பனைவெல்லம் மூணு நாளைக்கு உப்பில்லாப் பத்தியம் அரம் கண்டால் மருந்தை நிறுத்தி அந்த நாள் தலைக்கு விளக்கெண்ணெ தேய்த்து முழுகவும் பதினோரும் நாள் வரையில் இச்சாபத்தியமாய்ச் சாப்பிடவும்

— அரமாத்திரை —

வெள்ளைப்பாசாணம் கிராம்—9,- கெவுரிப்பாசாணம் கிராம்—9 லிங்க கிராம்—9, துத்தம் கிராம்—9, எலுமிச்சம் பழச் சார் அரவை -6- மணிநேரம்.

— மண்டூரம் —

நெல்லிமுள்ளி கிராம்—140, கடுக்காய் கிராம்—70, மிளகு கிராம்—18, சுக்கு கிராம்—35, காந்தம் கிராம்—35, அயம் கிராம்—35, ஊரம் கிராம்—70 காந்தம், அயம் இரண்டையும் கையாந்தகரைச் சார் விட்டு அரைக்கவும் மற்றச் சரக்குகளைச் சூரணம் பண்ணி அதில் போட்டு கையாந்தகரைச் சார், எலுமிச்சம் பழச் சார் விட்டு அரைப் 4 இரண்டு மணிநேரம் உரலில் போட்டு இடிக்கவும் மறுபடி கல்வத்திலிட்டு அரைக்கவும் அரைத்து வில்லை தட்டி உலரப் போட்டு, 8 கிராம் வீதம் நெய்யிலாவது தேனிலாவது விளக்கெண்ணெயிலாவது தேகம் பார்த்துக் கொடுக்கவும் வியாதி தீரும் கைகண்டது.

சுக்கு கிராம் — 9, இந்துப்பு கிராம் — 9 — சுக்கு உப்பு சுத்திசெய்து (பூண்டு சாறு சுத்தி) பெருங்காயம் பொரித்துக் கொள்ளவும்

— சுரபேதி நிறுத்த —

அதிவிடயம், திருநாகப்பூ வறுத்துப் பொடிபண்ணி வைக்கவும் கிராம்பு வறுத்தி வெந்நீர் விட்டு அரைத்துக் கரைத்து மூன்று விசை முறிச்சி வடிகட்டிக் கொண்டு அதில் இந்தப் பொடியைப் போட்டுக் கலக்கிக் கொடுக்கவும். சுரபேதி நிற்கும் கைகண்டது.

— பெரும்பாட்டுக்கு மருந்து —

வெள்ளைப்பூண்டு இரண்டு பூண்டு எடுத்து, வெண்ணெ போலே அரைத்து, அந்த விழுதைப் பசுவின் பாலில் குழப்பிக் கொடுக்கவும்; பத்தியம் பசுவின் பாலும், சாதமும் புட்டு வெல்லம் தொட்டுக் கொள்ளவும் மறுபத்தியத்தில் கஞ்சி குடிக்கவும் அதுக்கு மேல் இச்சாபத்தியம்.

— வல்லாரைச் சூரணம் —

வல்லாரை இலை பாலில் சுத்திசெய்து உலர்த்திச் சூரணம் பண்ணியது கிராம் — 350; கிராம்பு, ஏலம், சாதிக்காய் சாதிப்பத்திரி, மாசிக்காய், தாளிசபத்திரி, திரிபலாதி வகைக்கு கிராம் — 35 இவை வறுப்பாய்ச் சூரணம் பண்ணி சீனிக்கரை சமன் கூட்டிச் சாப்பிடவும் வெட்டை கைகால் எரிவு, சூச்சல் தீரும் இச்சாபத்தியம். நெய் அனுப்பானம்

— மூலத்துக்கு — மருந்து —

சிகப்பு நாயுருவி ஒருகுத்து (50 கிராம்) ஈர வெங்காயம் இரண்டுகுத்து 120 கிராம் இது இரண்டும் கூட்டிப் பசுவின் நெய்யில் தின்னக் கொடுக்கவும் - உள்மூலம், பித்த மூலம், கருப்பு மூலம் இவைகள் தீரும் கைகண்டது.

சிவமயம். அமாவாசையில் கோவை யிலைச் சாறு மிலி 200
வெள்ளாட்டுப் பால் மிலி — 200 இரண்டும் கூட்டிக்
கொடுக்கவும் அன்றைக்குமாத்திரம் உப்பில்லாப் பத்
தியம் திருமையாய் இருக்கவும் ஒருநாளிலேயே தீரும் மறு
நாள் கொடுக்க வேண்டாம் கைகண்டது.

கல்நார் பற்பம்: (சோமயாசார் செய்த முறை)

கல்நார் கிராம் — 70 குமரிச் சாறு விட்டு 6 மணி நேரம்
அரைத்து வில்லை மெல்லிசாய் தட்டி 4 துச் சட்டி நடுவில்
வைத்து மேல் மூடி சீலை மண் செய்து 6. மணி நேரம் கடுமை
யாய் எரிக்கவும் பற்பமாகும். அதை எடுத்து வைத்துக்கொ
(ரு) மேகம், புண், வெட்டை, பிரமியம், நீர்க்கட்டு, அருகல்
நீர்எரிச்சல், வாய் வேக்காடு அழல் மது மேகம் முதலான
தும் தீரும் அனுப்பானம் வெண்ணெயில் சாப்பிடவும்
மேகத்துக்குத் தகுந்த அனுப்பானத்தில் சாப்பிடலாம் பல்லு
இருக்கச் சகலவியாதியும் தீரும் ஃ. நுவாரும் பத்தியம் இச்
சாபத்தியம் வேளைக்கு இரண்டு பணவிடை மூன்று
பணவிடை (500 மிலிகிராம் முதல் 750 மிலிகிராம் வரை)
தேகம் பார்த்துக் கொடுக்கவும் பல்லு விளக்கத் தரம்பவும்
சவுக்கியம் இது கைகண்டது — சிவதிருவை.

வெட்டைக்கு கல்மத பற்பம்

கல்மதம், கல்நார், சிலாசத்து இவை சமன் முதலில் மே
னிச் சாறு புடம் ஒன்று, வெள்ளருகு இலைச் சாறு புடம் ஒன்று
முள்ளிக் கீரைச் சாறு புடம் ஒன்று ஆக புடம் - 3. வரட்டி 30

அசுவகெந்தாதிச் சூரணம்

பாங்கான பச்சைமாம் வீசிடும் அமுக்கரா பதினைந்துபலமதாக
பக்கமா திரிகடுகு சீரகம் செவியம் பருஓமம் சிறுதேக்குடன்
தாங்காத இலவங்கப்பத்திரி அரத்தை நாகமரும் ஏலம் மதுரம்
நீங்காமல் ஓரொன்று ஒன்றதாய் இடித்துக் கருநீரில் கொள்
ஆங்கார அத்திசுரம் வாய்வு கிராணி அனலேறு சயரோகமும்
அரோசிகம் விக்கலும் வாந்தியும் போம் அசுவகெந்தாதியிதுவே

அலகியையறும் மேட்டுக் காய்ச்சாறு நாழி (100 மிலி)
அதுபோலவே சம்பிரப் பழச் சாறு நாழி,
இலைசெறு வெள்ளுள்ளிச் சாறு நாழி.
கொட்டையின்றி வெண்ணைச் சிச்சாறு நாழி
இளமறவே காய்ச்சியதை யிட்டொன்றாக்கி
சாதிலிங்கங் காயமொடு ஆதங் கூட்டு
நிலமுடைய கெந்தகமும் யிந்துப் போடு
நாய்க்கடுகு மோதகமுங் கடுகு கொள்ளோ
கொள்ளவது மிளகுமஞ்சள் இக்கில் வாலம்
குணமாகச் சித்திசெய்து கூட்டக்கேளு
உள்ளபடி நிறை மூன்றுகாசுச் சீர்கூட்டு (5 கிராம்)
உறவாகப் பாகசெய்து மருந்தில் கூட்டு
மெள்ளவது பழம்புளி போல் பதமேயாகி
மிதமாகத் தூதுவளம் பழம் போலுண்ண
உள்ளபடி இன்மெட்டுச் சூலைவாதம்
உதிரமொடு பெருவயறு ஓடுந் தானே.

காலக்கண்டம் எல்லோரி அந்தரவைத்தியர் முறைத் திராவகம்.

வெடியுப்பு கிராம் — 490, படிகாரம் கிராம் — 490
கறியுப்பு கிராம் — 35, கெந்தி கிராம் — 35, காந்தம் கிராம் — 35
கடல்நுரை கிராம் — 35, பூநீர் கிராம் — 35

— செந்தூரச் சரக்கு —

லிவன் விந்து கிராம் — 120, வங்கம் கிராம் — ~~?~~ 60, கெந்தி
கிராம் — 40, தாளகம் கிராம் — 40, மனோசிலை கிராம் — 24
வீரம் கிராம் — 20 அடுப்பு பாக அடுப்பு

— திராவகம் —

வெடியுப்பு கிராம் — 210, மதியுப்பு கிராம் — 105, சூர்மம் கிராம்
— 70, சாரம் கிராம் — 35, அன்னபேதி கிராம் — 88, நீலகிராம்
— 53, படிகாரம் கிராம் — 175, பூநீர் — கிராம் — 9, பொன்காவி
கிராம் — 105

கெந்தகம் — 245 கிராம், கரிசாலைச்சார், மேனிச்சார், துளசிச்சார் குமரிச்சார், நிம்பழச்சார், பூசணிக்காய்ச்சார், இளநீர், ஆவின்பால், செங்கரும்பு இரசம் தேன் வகைக்குப் ~~ச~~ லிட்டர்-1. வாங்கி ஒரு ஒருத்தியாய்ச் செய்து எடுத்துவைத்துக் கொண்டு அனுப்பானம் தேன் நெய்யில் பணவெடை மத்திச்சுக் கொடுக்க

— தலைவலிக்கு வத்தி மருந்து —

அரிசித்திப்பிலி, கண்டத்திப்பிலி, பெருங்காயம், பூண்டு, சாம்பிராணி, மஞ்சள், வகைக்கு கிராம் — A, பொடிபண்ணிக்கொண்டு, வெள்ளைத்துணி ஒன்றில் எருக்கம்பால் நனைத்து அதில் பொடியைத் தூவித்திரித்து காயவைத்து கொளுத்தி நாசியில் வைத்து இழுக்கவும் தலைவலி சிரசிலுண்டான ரோகங்கள் தீரும் கண்டது.

வலிப்புக்கெல்லாம் புகை : சிக்கான் போடவும்.

இரசம் கிராம், 4, அரிதாரம் கிராம் — 4, லிங்கம் கிராம் — 4, அபரி கிராம் — 8, தாலகம் கிராம் — 4, பொடி செய்து சிக்கான் பண்ணி அதில் வைத்துப் புகைக்கவும் உப்பில்லாப் பத்தியம். ஐந்து நாள் பிடிக்கவும். 15-ம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும் எந்தப் புண்ணும் கிரந்தியும் தீரும்.

— இருமலுக்கு அவிழ்தம் —

தேத்தாக்கொட்டை கிராம் — 120, கிராம்பு கிராம் — 8, கல்கண்டு கிராம் — 35, தாளிசபத்திரி கிராம் — 35 ; தேத்தாங்கொட்டையை கோநீரில் ஊறவைத்து, ஊறின பிறகு அரைத்து விழுதையெடுத்து இந்த மூன்றும் ஒன்றும் பொடி பண்ணி மேற்படி கூட நீர் விட்டுக் குழப்பி அடுப்பில் வைத்துக் கிளறி கல்கமா திரண்டுவருகிற பக்குவத்தில் இறக்கி வைத்துக் கொண்டு பாக்களவு தின்னவும் இச்சாபத்தியம் இருமல் கோழை நீங்கும் கண்டது - குருபேர் சொல்லித்தின்னவும்

=

14.6.85 திராகபற்பம்

பூரசம் பட்டை வெயிலில் வைத்துத் தூள்பண்ணி ஒரு அடை
யை சட்டியில் வைத்துச் சுட்டுச் சாம்பலாக்கி, அதன் மேல்
திராகம் வைத்து மேற்படி மேலும் பூரசம் பட்டை அரைத்த அடையை
மேற்படி நீல சாம்பலில் சீலைமண் செய்து கீழ் மேலும் சாம்பல்
வைத்து புடமிட்டு திராவகம் கொஞ்சம் விட்டு பட்டைச் சாம்பல்
மேலும் போட்டு -10- நாட்களுக்கும் பற்பமாகும்

— திராகபற்பம் —

பூரசம் பட்டை வெட்டி வந்து அதைச் சுட்டுச் சாம்பலாக்கி
அந்தச் சாம்பலில் கருப்பட்டிச் சாறாயமாவது, பட்டைச்சா
றாயமாவது விட்டுப் பிசைந்து இரண்டு அடை பண்ணி ஒரு அ
டையைச் சட்டியில் வைத்து, அதன் மேல் திராகம் வைத்து
மேலே ஒரு அடையாலே மேற்படி சீலைமண் செய்து கீழ் மேலும் சாம்
பல் போட்டு பத்து முழுவதுக்கும் பற்பமாகும் இந்தபற்
பம் இருமல், வயத்துவலி, சுரம் இன்னும் தீரும்.

— நீடதயிலம் — ஊமத்தயிலம் —

நீடம் கிராம் — 245, வெடியுப்பு கிராம் — 125 இரண்டும்
பொடிபண்ணிக் கலசத்தில் போட்டுவைக்கவும்

ஊமம் ~~[illegible]~~ கிராம் 245, (உரைப் போட்டு உலர்த்தி) வெடியுப்பு கிராம் 60
இரண்டும் பொடியாக்கி கலசத்தில் போட்டு இறக்கவும்.

— கண்டாத் திரி [illegible] —

இஞ்சி கிராம் — ~~[illegible]~~ 500, சுக்கு கிராம், 20, அரிசித்திப்
பிலி கிராம் — 32, கொடிவேலிப் பட்டை கிராம் — 8, மிளகு
கிராம் — 48, சீரகம் கிராம், — 20, சாதிபத்திரி கிராம் — 20
கிராம்பு கிராம் - 8, ஏலம் கிராம் — 20, கூகைநீர் கிராம் — 20
கண்டத்திப்பிலி கிராம் — 32. தேன் கிராம் — 250.

14.6.85 கொம்பரக்குத்தைலம்

கொம்பரக்கு கிராம் — 280, தீரணீர் — (அ) ?, நல்லெண்ணெ லிட்டர்-4, தயிர்தண்ணீர் லிட்டர் — 1-600, பால் லிட்டர் — 4, காடி லிட்டர் — 1-600, அருகுப்பை, கடுகுரோகிணி கிளியூரம் பட்டை கிராம் வகைக்கு — 175, பூலாமூலம், செவ்வல்லி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, சடாமாஞ்சில், கோட்டம், அதிமதுரம், சந்தனம், இருசீரகம், செவியம், ஏலம் வகைக்குக் கிராம் — 18, பால்விட்டு அரைத்து மெழுகுபதத்தில் வடித்துக்கொள்க, மயக்கம், கபம், பித்தவெட்டை, 64 அரம் மேகவாய்வுகள் தீரும்

— திராவகம் —

வெடியுப்பு கிராம் — 280, தினுக்காரம் — 210, சாரம்கிராம் — 140, வெங்காரம் கிராம் — 135, பாறையுப்பு கிராம் — 70, துருஅ கிராம் — 53, அன்னபேதி கிராம் — 35, காந்தம் கிராம் — 18 வீரம் கிராம் — 9

— சாம்பிராணித் தயிலம் —

சாம்பிராணி கிராம் — 250, அடம் கிராம் — 35, இரண்டும் பொடி செய்து கலயத்தில் போட்டு மேல் கலசம் மூடி சீலை மண் செய்து எரிக்கவும்.

— புகைப்பட்டை பண்ணும் வகை. —

பரங்கிப்பட்டை கிலோ — 500. கருஞ்சீரகம் கிராம் — 70 கிரார் போகர்ச கிராம் — 70, குக்கில் கிராம் — 18 _ பரங்கிப்பட்டை மெல்லியதாய்ச் சீவி இந்த மூன்று மருந்தையும் இடித்துக்கொண்டு புதுச் சட்டியில் போட்டு சாதிலிங்கம் கிராம் — 24ல், 12 கிராம் பொடி செய்து பட்டையில் கலந்து கருநொச்சியிலைச்சார் லிட்டர்- 0.800 மிலி, நுணையிலைச் சார் லிட்டர் — 0-800 மிலி, செருப்படைச்சார்- மிலி- 0.800, சிறுசெருப்படைச்சார் 0.800 மிலி இம்மருந்தெல்லாம் சட்டியில்விட்டு இந்தச் சாறுகள் விட்டு விட்டுப் பிசறி நிழலுலர்த்தாக உலர்த்தி உணர்ந்தபிறகு சருகு பண்ணி

பலிங்குச் சாம்பிராணி கிராம் — 140, சாதிலிங்
கம் கிராம் — 12, இரசம் கிராம் — 12, சட்டி நடுவே வைத்து
சட்டி மேலே சாரை வைத்து, அதின் மேல் மருந்தை வைத்து
மேற் சட்டி கொண்டு மூடி ஏழு சீலை மண் செய்து அடுப்பில்
வைத்து விளக்கெண்ணெய் விட்டு, பெரும் வத்தி போட்டு 30 நா
ழிகை (12 மணி நேரம்) விளக்கெரிய விட்டு, அதின் பிறகு ஆற
விட்டு எடுத்து, கல்லுரலில் போட்டு இடித்து சூரணம்
பண்ணி அந்தி சந்தி புன்னைக்காயளவு இதற்கு அனுப்பானம்
தேன், ஆவின் நெய் தீரும் நோய்:- மேகம் 21ம் தீரும்
இச்சாபத்தியம் மோர், நெய், பால், ரெம்பவும் கூட்டலாம்
இது கைகண்ட முறை

— சிவமயம் — பூரபற்பம் —

பூரம் கிராம் — 35, ஒரு கட்டியாய் வாங்கி ஓமம் புடைத்தை
டுத்தது 800 மில்லி எடுத்து ஒரு கருங்குடுவைக் கலசத்தில்
400 மில்லி ஓமம் கீழே போட்டு நடுவில் பூரக்கட்டியை
வைத்து மேலே ஓமம் போட்டு வாய்க்குச் சீல் விட்டுச்
சீல்செய்து ஓமம் கருகி ஐந்து வரட்டியில் புடம் போடவும்
ஆறின பின் பூரக் கட்டியை எடுத்துப் பொடி செய்து வைத்
துக்கொண்டு வலுவான தேகமானால் 300 மிலிகிராம் மெலி
வான தேகமானால் 200 மிலிகிராம் கொடுக்கவும் அனுப்
பானம் பசுவின் வெண்ணெய் சாயந்திரம் நெய்யில் தேனில்
கொடுக்கவும். பனை வெல்லத்திலும் கொடுக்கலாம்
தீரும் வியாதி:- வாதம் 80, சூலைக்கட்டு, மேகம், அரையாப்பு
விரணம், கிரந்தி இதுவெல்லாம் தீரும் இச்சாபத்
தியமாகவும் கொடுக்கலாம்.

நல்லெண்ணெய் 400 மில்லி, கையாந்தகரைச் சாறு -400 மில்லி
வெள்ளாமிளகு கிராம் —35, குழப்பிக் கொடுக்கிறது
நான்கைந்து முறை வயிறு போகும். உடனே பச்சைத் தண்
ணீரில் தலை முழுகிச் சாப்பிடவும்.

— எலிகடிக்கு —

மிளகு கிராம் —12, பூண்டு கிராம் —12, புளி கிராம் —12, திருகு
கள்ளி ஒரு துண்டுக்கு மூன்று பங்கிட்டு ஒருபங்கை எடுத்து
அரைத்து குழப்பிக் கொடுக்கவும் பேதியாகும்; பச்சைத்
தண்ணீரில் முழுகி விட்டுச் சாப்பிடவும்.

— பஞ்சபாண இரசம் —

இரதமுஞ் சித்திகூட இசைந்த டங்கணம் வேர்க்கொம்பு
மரீசம் மோதகம் கணபம் வகைக்கிரைப் பலமதாக.
அர்த்தி ரவுத்திரம் நாபி ஆன தோர்யவச் சாரங்கூட
மருவு சாதிக்காய் சாரம் வகைக் கொருகழஞ்சி கூட்டே
கூட்டியே கல்வத்திட்டு க்கூறியன் ஒரு சாமந்தான்
ஆட்டிடப் பொடியதாகு ரப்பாம் அனுப்பான விசேசந்தனு
பேட்டைத்தேன் அவிழ்தம் தன்னைப் போக்கிடும் வியாதி கேளு
நேருமே மேல ரோகம் நடையான பச்சைவாதம்
நேருமே சயித்தியம் சின்னி நிலமுடன் அந்திரவாய்வு
மீறுமே வடமற்கு தான் சுவாசகாசங்கள் இரண்டு
நீறுமே பஞ்சபாண இரசமென உரைத்திட்டோமே.

இரதம் — இரசம்	அர்த்தி — கடுக்காய்
சித்தி — கெந்தகம்	ரவுத்திரம் — வீரம்
டங்கணம் — வெங்காரம்	நாபி — கருநாபி
வேர்க்கொம்பு — சுக்கு.	யவச் சாரம்
மரீசம் — மிளகு.	~~சாரம்~~ நவச்சாரம்
கணபம் — திப்பிலி.	

லிங்கம் கிராம்—35, இரசசெந்தூரம்—18, வீரம் கிராம்-4
இவைகளைக் கல்வத்திலிட்டு, அரைத்து விளக்கெண்
ணெ ஐந்தாறு சொட்டுவிட்டு அரைத்து எடுத்துக் கொண்
டு பொடிபண்ணித் தேன்விட்டு மெழுகுபோல் எடுத்துக்
கொண்டு அதற்குள் வைத்துப் போடவும். வாய்வு, பித்
த வாய்வு, சூலைக் கட்டு வயத்துவலி இவைகளுக்குக் கொடுக்
கவும் — இச் சாபத்தியம்.

— இஞ்சிலேகியம் —

இஞ்சி —500 கிராம், மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி, ஏலம்
சீரகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கடுக்காய், கிராம்பு, அதி
மதுரம், கோட்டம் வகைக்குகிராம்—18 இஞ்சியைநெய்
விட்டு வறுத்துக் கொண்டு சாறு பிழிந்து, மற்றச் சரக்கை
ஈர்ச் சூரணம்பண்ணி சர்க்கரை கிராம்—375 போட்டு
பாகு இறுத்தி லேகியபதமாகக் கிளறி நெய் தேன் விட்டுப்
பிசைந்து கொண்டு வேளைக்குக் கொட்டைப்பாக்களவு
சாப்பிடவும் தீரும் வியாதி பித்தவாய்வு பித்தஎரிச்சல்
உட்டண வாய்வு பொருமல் அரோசிகம் இவைகள்தீரும்
இச் சாபத்தியம்: (இதற்குக் கடுகு இம்மருந்து திப்பு இல்லாமல் உண்ணு)

— வாழைப்பழ லேகியம் —

பேயம்பழம் இரண்டுசீப் (சுமார் 40 எண்ணம்)
சீரகம் கிராம்—70, கிராம்பு கிராம்—8, சன்னலவங்கப்பட்டை
கிராம்—8, சுக்குகிராம்-140, மேல் தோல் போக்கிமாவு
பண்ணிப் போட்டு நெட்டுச் சர்க்கரை கிராம்—60 தேன்
கிராம்—35, நெய் கிராம்—35 லேகியமாக்கவும்.

— வாய்வு லேகியம் —

சுக்கு கிராம்—35, மிளகு கிராம்—35, சீரகம், ஏலம், மல்லி
திப்பிலி, செவியம், திப்பிலிமூலம் வகைக்கு கிராம்—35
தாளிசபத்திரி, லவங்கப்பட்டை, ~~கிராம்பு, அமுக்கராங்கி~~
~~ழங்கு~~ வகைக்கு கிராம்-18, கிராம்பு கிராம்—9

17.6.85

அமுக்கிராங்கிழங்கு கிராம் — 35
திராட்சைப்பழம் கிராம் — 35
கருப்பட்டி கிராம் —— 420 தேன் கிராம் 120
நெய் கிராம் 120 (லேகியமாக்கவும்)
(மேற்கண்ட மருந்தும் செய்முறையும் தயாரிக்க)

— கெந்தக மெழுகு —

கெந்தகம் 240 கிராம் பொடி செய்து கத்தாழை மடல் சாறு லிட்டர் இரண்டு ஒரு சட்டியில் விட்டு மேலே துணி வேடுகட்டி அதிற் பரப்பி மேற்சட்டி கொண்டு மூடி சீலை செய்து குழிதோண்டி கீழ்சட்டி குழிமட்டம் வைத்து மேற் சட்டிமேல் புடம் போட்டு எடுத்துப் பார்க்க கீழே யிறங்கியிருக்கும். அதை எடுத்துக் கொண்டு ரல்தாழிப்பழம் செயநீர் லிட்டர் இரண்டு இறக்கிக் கொண்டு கெந்தகத்தைச் செயநீரில் போட்டெரித்து மெழுகுபதத்தில் எடுத்துக்கொண்டு இரசம் கிராம் 120 கல்வத்திலிட்டு மெழுகையும் போட்டு அரைத்துக்கொண்டு சேலம் சர்க்கரை கிராம் 480 போட்டு அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

— மூலத்துக்கு நெய் —

நெய் லிட்டர் இரண்டு, நாயுருவி இலைச் சாறு லிட்டர் ஒன்று, கவிழ்தும்பை இலைச் சாறு ~~xxx~~ லிட்டர் ½ (500மிலி), வெங்காயச் சாறு லிட்டர் ஒன்று, சீரகம் கிராம் — 70, இந்துப்பு கிராம் — 35, சர்க்கரை கிராம் — 70, இது சேர்த்து நெய் எரித்து, இறுத்துப் பிறகு சர்க்கரை சேர்த்து சிறு அந்தி சந்தி கொடுக்கவும் இரத்தமூலம் இரண்டையும் உடனே தீரும் இச்சாபத்தியம் — மனோன்மணி துணை உண்டாகவும்.

17-6-85 <u>மூலத்துக்கு லேகியம்</u>

நாயுருவி இலை கிராம் - 240, வெங்காயம் கிராம் - 120
சீரகம் கிராம், 35, நாட்டுச் சர்க்கரை கிராம் - 70 இது
நான்கும் அம்மியிலே வைத்து நன்கு அரைத்து சட்டி
யில் போட்டு அடுப்பில் வைத்து பசுவின் நெய் விட்டுக்
கிண்ட வரும் போது சர்க்கரையைப் போட்டு இறக்கி
வைத்துக் கொண்டு அந்தி சந்தி பாக்களவு கொள்ள
மூலம், ரெத்தக் கடுப்பு, உளைச்சல் இந்த வியாதிகள் எல்
லாம் தீரும். சிவமயம்

— கபாட மாத்திரை —

போடவே கபாடமென்ற மாத்திரை தான் கேளு
புகழான சாதிக்காய் சாதிப்பத்திரியுங் காயம்
நாடவே சீரகமும் அதிவிடயம் கிராம்பு
நிலமான அபின் சுடு வன்னி கற்பம்
தேடவே வெந்தயமும் கிழற்சிவித்து
திறமான குரோசாணி பதினொன்றுந் தான்
ஆடவே மென் தாக்கிக் கல்வத்திட்டு
அப்பனே ஆனந்தமேலிச் சாத்தில்
சாத்தினுல் நாற் சாமம் அரைத்துக் கொண்டு
சாதகமாய் இலந்தவிதைப் பிரமாணந் தான்
உராதிலே உரமையுடன் பூவின் சாத்தில்
வனதியான க்னியிலே யிட்டாயானல்
வேத்திலே ரெத்தமென்ற மூலக்கிராணி
விதமான சலக்கிராணி சிந்துக்கிராணி.
ஆமப்பா பாண்டுகிராணி, வாய்வுக்கிராணி.
அப்பனே சீதகிராணி தீரும்_

பாரப்பா கோடமென்ற லேகியத்தைச் சொல்வேன்
பண்பான நாகலொடு அரசு அத்தி
சேரப்பா கருங்காலி ஒதியன் பட்டை
திரமாகப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
சாரப்பா குடத்துநன்றாய்த்தான் நீரில்
திரமாக அடுப்பேத்தியெட்டொன்றாக்கி
வாரப்பா பழவெல்லம் பலந்தான் பத்து
வளமாகி அரைத்ததில் பாகு செய்யே.
௧

பாகிலே தூவுதற்கு மருந்து கேளு
பதறாதே கிஞ்சாலைச் சுத்திசெய்து
பாகிலேபலமொன்று தூக்கிக் கொண்டு
பாங்காகச் சுக்கு சீரகம் மிளகு
பாகிலே ஓமமொடு குரோசாணி ஓமம்
குருவான சிங்கியொடு காட்டத்திப்பூ
பாகிலே சிறுநாகம் வால் மிளகு.
பக்குமா மல்லியொடு ஏலமாமே.
௨

ஆமப்பா கிராம்பு சாதிக்காய் பத்திரி.
அப்பனே திப்பிலி விடையமாகும்
வேமப்பா வகையொன்று பலமொன்றாக
வேமப்பா இளவறுப்பாய்ச் சூரணித்து
நிலமாகப் பாகிலே தூவித் தூவி
வெகு சுருக்காய்த் தேன் நெய்யும் விட்டுக்கிண்டு
தாமப்பா லேகியத்தைப் பதனம் பண்ணு
தப்பாமல் பாக்களவு கொள்ளுகொள்ளே.
௩

18.6.85

அளவாகக் கொண்டு வரத் தீரும் நோய் கேள்
அப்பனே சூதிகாக் கிறாணி வாய்வு
ஆசனவாய்க் கடுப்பு முதல்பாண்டுக் கிறாணி
பாங்கான பேதியொடு உட்டணவாய்வு
வாமாகக் கிறாணியெல்லாம் தீரும் தீரும்
வாகான மேலத்தில் கிறாணியெல்லாம்
கண்கிராணை தோடுமடா கண்டுபாரே.

புழுவெட்டு கிறதற்கு — கட்டாத கழிச்சலுக்கு

பெருங்கரையான் கூட்டுமண்ணை யெடுத்து சற்றுப்புங்கிட்டு
சிறுநீர் வார்த்தரைத்து மூன்று நாள் பூச மயிர் முளைக்கும்

கட்டாத கழிச்சலுக்கு.

வெள்ளைக்காசுக்கட்டி கிராம் — 4, அபின் கிராம் — 2
இது இரண்டும் பொடி பண்ணிக் கொண்டு இரண்டு பண
வெடை எடையில் கொள்ளவும் மூன்று நாள் கொள்ளவும்
கழிச்சல் நிற்கும்.

பிள்ளை பெற்ற பேர் கழிச்சல் கிறாணி, வெள்ளைப்பு காய்ச்சல்
மேழுத்தக் கழிச்சலுக்கு

ஓமம் பிடி ஒன்று அமார் 50 கிராம்
வெள்ளை வெங்காயம் தோல் போக்கி 50 கிராம்
அதிகுத்தேர் - 4 - அமார் 25 கிராம்
சாதிக்காய் — 1 - இந்துப்பு 5 கிராம்

இது ஐந்தையும் ஒவ்வொன்றையும் இரண்டு பங்கிட்டு
பாதி பச்சையாகவும், பாதி இள வறுப்பாகவும் வறுத்து நன்கு
அரைத்து சிறு கொட்டைப் பாக்களவு உண்டை பண்ணி
ஒவ்வோர் உருண்டையாக உண்டுவர சரியாகும்

18.6.85 — பேதியாகிற மருந்து —

இரசம் கிராம் — 4, கெந்தகம் கிராம் — 8, பொரிகாரம் கிராம் — 12
மிளகு கிராம் — 16, சுக்கு கிராம் — 20, கடுக்காய் கிராம், 24
வாளப்பருப்பு கிராம் — 32, வெல்லம் கிராம் — 120

— மகியாலத்தார் விசுகம மருந்து —

திருஞ்சீரகம், திரிகடுகு, நாவிக் கிழங்கு, நேர்வாளம், திரிபலா
கஸ்தூரிமஞ்சள், தேவதாரம், அசமதாகம், காட்டத்திப்பிலி
இரசம், வசநாபி வகைக்கு கிராம் — 35 அரைப்பு ஒருசாமம்

அரிஓம். குருவாழ்க; குருவேதுணை. சிவசிக்கம காமுனி கொழும்பு.

கவுசிக மகாமுனி சூத்ரம் 4

அருமொழியாய் ஆரும்பிழைக்க
இருவின் நாலாயிரத்து நானூற்றி ஒன்பது
மரவே குரு திருவருளால் குழம்பு சூத்திரத்தை
பெருமையாய்க் கவுசிகன் பேருரைப் பேனே.

கற்பித்த கடுக்காய் கடுகு இந்துப்பு
நற்பெருங் காயம் நல்ல வெண்காரம்
மெய்ப்புள்ளாத்தும் மேவுமனோசிலை
திப்பிலி சாரம் நற்சீரகத்துடனே
ஒப்புள்ள கடுகரோகிணி நாவி
அப்படி மருந்து அது பன்னிரெண்டு
இப்படி நேர்வாளம் இதுக்குச் சமன் ஒன்று
உற்பன நஞ்ச உயர் முசு போக்கி
நில்லா வறுப்பாய் அஞ்சாமல் பூரணம்
அது பொடி செய்து வஞ்ச தன் பொய்த்தல சாற்றின் ஸோர் கொள்
கொஞ்சிய தேன் குடுக்கைக் கரியும்
அஞ்சவிரா கண்டை அதனுடன் கூட்டி
மிஞ்சிய நல்பனி வெல்லம் முன் நிறை
துஞ்சிய தேங்காய்ப் பாலாலாட்டி
இஞ்சிய பதத்தில் எடுத்து நீ வைத்திடே.

வைத்திருசிமன்னில் வரும்பிணி நோய்க்கு
உத்த அனுபானம் உரைத்திடக் கேளு
வெள்ளாய கிர்ம மிகுத்திடும் தோடங்கள்
கிருத்த அக்கிரந்தி கண்ட தோரெழும்
சில்லறைத் தோடம் சிணப்புக்கி தேசுகும்
பூவே சூ தோடம் முறித்திட வோடும்
நிலையில் பணவிடை நன்றாகத் தேய்த்திடும்

திடவியுண்ணுங் குளம் பொருமென்றி
அளவு தின்ன விடங்கள் தீர்க்கலங் கோடும்
இலைக் கிடைதனல் இன வேத வசையியில்
சலித்திடக் கத்தாளஞ் சோறுங் கொத்திடே
உண்ட குழம்பால் வயறால் வலிகண்டால்
நன்றாய் வயறும் நிலைந்து பேதித்தால்
திட்டமாய் மோரில் சிறுகிரம் பாவாரை
பட்டையால் தீரும் பயப்பட வேண்டாம்
எந்தவியாதிக் கும் இக் குழம்புண்டு
வந்தவியாதி மதிகெடும் போது
இருந்தால் வயறு ரெண்டு நாள்கழித்தபின்
இருந்தால் வியாதி துன்பம் கண்டிடுமே.
இக் குழம் பதனில் லாணு தொருவர்க்கும்
செப்பிய அந்தந்த ரோகங்களறிந்து
கையெருங்கைமுறை கண்டனுப்பானத்தில்
செப்ப முடனே தீரும் நோயெல்லாம்
திடமொழி மரவாக் குணமுடன் நன்றாய்
கற்றோர் பெரியோர் தங்களை வணங்கி
உள்ளவர் சொல்ல உண்மையை அறிந்து
நற்றவத் தோடே நயந்தணு பகையுடம்
உற்ற குழம்பு ஊட்டப் பலித்திடும்
தேள்கடி வாயில் சிறுகப் பூசிடே
வழலைக்கடி போல் வரும் நண்டுகாலிக்கு
இரவில் பணவைடை நன்றாய்த் தடவிட
கடிவிய வெண்ணீர் குடித்திடமீறுமே.
சின்னி தோடக்கண்ட சர்வசுரத்துக்கும்
வெந்நீரிற் கொள்ள விட்டகன் றோடும்
கடுக்காய்ச் சாற்றில் கா ரிடை கொள்ள
இருக்குங் சுரங்கள் இருபதும் தீரும்.

19.6.85

முடக்குச் சீரசரம் மேதேவி போய்விடும்
சிக்குவென்னீரில் கொள்ளச் சொல்
ஸ்ரீதேவி செரகக்கியாமத்தில் கொள்ள
ஸ்ரீதேவி வெண்சிரம் முறிந்து கெட்டோடுமே
எட்டுச் சுரங்கள் எல்லாம் மிளகுடன்
அட்டையில்லாமல் அகண்டு போமென்னே.

கொண்ணைக் கொழுந்தும் கூறும் கடுக்காய் பொடியும்
எண்ணெயில் கொள்ள ஏகும் உப்பிசம் போம்
சின்னவிருமல் சத்தியுள் மாந்தைக்கு
சொன்னநல் மோருடன் சுக உசலம் பட்டையில்
தீரும் இருமல் கண்டப்புதீர் இருநேரம் கொள்ளு
எண்ணெமுலைப்பாலில் குட்டநோய்
குவளைப்புருதிக்கு ஆடாதோடை அரத்தையின்பாலால்
சிடாகயெண்ணெயில் சுகம் பெறக்கொள்ளுவீர்
பீளை இருமல் ஏங்கலுப்பிசம் போம்
கோளைமண்ணைக் கட்டுக்கூடுவிப்புறிக்கும்
ஆள அருந்தும் அளமை மோருதன்னில்
வேளைக்கு நாவுமிராகண்ட அருந்த
பாளைவிப்புருதி பதிமூன்றுக்குள்ளாட்டு
பாலில் வெண்ணெயில் அண்டமொருமல்
பக்கச் சூலைக்கு உண்டாரும் பசுவின்நெய்
சிலாங்குப் பாஸ்சிர்க் கரைகாய்ச்சிய நெய்பாலில்
உண்டாரும் உட்டணவாய்வுதிர் சிதுங்கும்
சீதகவாய்வு சுக்குநீர் சீரகம்
பாவுடன் பரங்கிப்பட்டைத் தூள்நெய்யில்
சிலைகளான் பது சக்குடன் தீரும்
நீருள்ள சிக்குமிளகு சீரகத்தில்.

தேறிய குழம்பு சேர்த்துடன் கொண்டிட
பாரிய சூசிகா வாய்வு பறந்திடும்
மேலமுள்ளிக்கு முலைப்பால் எண்ணெயில்
கோலபிலங்கிண்டு கொஞ்சிடை தீரும்
மூலங் கொல்வீர் தூதுபத் திரிச்சாத்தில்
ஒன்னிய உள்ளூசலின் பட்டையின் பாலில்
கொள்ளவே சுவாச காசங் குலைந்திடுஞ்
சித்தகுன்மம் நீகரைச் சாற்றில்
பித்தகுன்மம் புளியிலைச் சாத்தில்
வாய்வு குன்மம் வல்லாரைச் சாத்தில்
எரிகுன்மம் — அருகன் கிழங்கு நீர்ச்சீரகம்
உருகிய நெய்யில் பாலூத்திக் கொடுத்திட
எரிவலி குன்மம் விளக்கெண்ணெ தன்னில்
கருதிய குழம்பு கிரிசையாகும்
பயித்திய குன்மம் பழம்பாசி மோரில்
நயத்துடன் கொள்ள நல்லதாமென்ன
அண்டவாதம் வெருகளுதையுடன் சிறுநீர்பூட்டிட
எண்பது வாதமும் இதமேன் தீர
அன்புள்ள கடுகை அதனுடன் பாலில்
தென்புகுழம்புண்ணத் தீர்ந்திடும் வாய்வெல்லாம்
பஞ்சுடன் ரோகம் சன்னியதி மேன்றுக்கும்
இஞ்சிச்சாறும் இதமேள்ள அக்கிநீர்
இனத்தில் நின்றுய் மேன்று நாள் கொள்ளு
எருக்கிலைச் சாற்றில் இன்றுடன் கொள்ள
வெரிக்கும் பேய் நரியை எலிக்கடி அரணை
செய்யான் அரிவண்டு பூரான் பொரிவண்டு
நீர் வண்டுகடையென்ற சில விடமுள்ளது
அய்யா விடங்காறுபத்து நாலுக்கும்
பொய்யாமெருக்கும் பரூப்புச் சாற்றிடே.

மைப் போலிருத்த வழலை மைக்குரு
கெழம் போர் மேக்குன் கொடாய விரியன்
வம்புசெய் நாகம் ~~ட~~லி புடையன்
தீண்டிய போது சிறுபயத் தாவு
வுண்டாயே கலிக்கம் உள்ளுங் கொடுத்திட
பருத்திச் சாற்றில் நில்லாவிட்டால்
வெத்தில பருத்தி வெந்நீர் தன்னிலும்
மூட்டலாம் விரிதல நாகம் விரியனும் தீண்டல்
பரியுடன் வேலிப்பருத்திச் சாத்திரூட்டு
கிண்ணின் கலிக்கம் காவு விசை வாய் வதிடும்
கூறிய குட்டங் குறைநோய் தீர
காரை நொச்சியிலைச் சாற்றில் கலந்துண்டு
மீறிய மருந்தை மேலெங்கும் பூச
பாரிய குட்டம் பதினெட்டும் போகுமே
தில்லைப் பூவும் வெல்லமுஞ் சேர்த்துண்ண
ஆருமேலசில மர்த்துநீர் பதக்கு
தில்மயிர் அட்டாம் பலும் வெண்காரம்
பொரியுடன் கூட்டப் பொசித்திடத்தீடும்
காமாலை சோகை கனத்தமகோதரம்
ஆமணக் கெண்ணெயில் ஆட்டுக் கோமியம்
திபனஞ் செய்யும் திரிபலைத் தூளுடன்
வாகுடன் சேர்த்து வகை குழம்பதனுடன்
காசிடை சேர்த்துக் கருத்துடனருந்த
சோகை காமாலை சொல்லா தோடும்
பாண்டுரோகம் பன்னிருவகையும்
அண்ட ரோகங்கள் ஆமணக் கெண்ணெயில்
ரெண்டு கடுக்காய்த் தூளுடன் நின்ற
குழம் ~~பிணாக்கி~~ நிறுத்துக் காஞ்சிசை ~~பூண்டவிழ்~~
பூண்டவிழ் பாண்டு ரோகங்கள் போமே.

வலிப்புச் சன்னி வாதங்கள்
சலித்திட்டு ஆட்டு தகுநாளச் சாற்றியுண்ணு
சூருவ வாதத்துக்கும் சந்து சூலிகளுக்கும்
செதுண்ணு மரையாப்பு ஜோத்திரிணங்கள்
கொருபரு கண்ணி ரத்தம் அரையாப்பு
சிலந்திபச் சைய் புண் கெடபாதச் சக்கரம்
பிறை பிறைச் சிலந்திகள் எண்பத்துநான்கும்
தீதுகள் பத்தும் சிலப் புறைக் காரம்
மூக்கு நீர்ப்பாய்ச்சல் முகவாத சன்னி
நாக்கில் நோவும் நல்லபல்லரணை
பார்க்க ஒண்ணு பல குத்து நோய்கள்
மண்டைச் சுரப்பு மாதவனுக்கும்
அண்டைய பீன்சம் அது இருநான்கும்
கபால சூலி கன்னக்கிரந்தி
குப்படக் கொத்த எழுவகை ரோகம்
செப்பிய நிரசில் நோய் தொண்ணூற்றாறும்
தீரவே நீ கேயி வெருக்கம் பாலூட்டே
ஓட்டடைய நீக்கி உலர்த்திக் கொம்மை
நீட்டடைய தனைத் திரியாய்த் திரித்து
நிம்பயெண்ணை தோய்த்து வைநெருப்பில் கொளுத்தி
இன்புடன் புகைதன்னை நாசியிலேத்தே
சொன்ன நோர் ரோகம் தொண்ணூற்றியாறும்
தீரும் கவிகள் செப்பிய குழம்பால்
விதைவாய்வு போலே வெகுவலிகண்டு
வலந்தலமடைத்து வாதைகள் மிகுத்தால்
நீல் வெளிப்படுத்தி நற்சாறுகால்படியில்
செவுத்து குழம்புதன்னில் நூறுகுண்டுமணியிடை

விரைந்துடன் கொல்லா வாய்வுமே விரண் போட
— பால் நெய் மோரில் பரிகரித்திடலாம்
ரெத்தமேலம் நறுநெய் தேனில்
உத்தபசுவின் பாலொடு குளர்ந்திடலாம்
மூலக் கிராணி மேக்கு வலிக்கும்
பால் நெய் மோரில் பரிகரித்திடலாம்
அரோசிமேலம் சிறுத்துக் கழிந்தால்
ஊசம் பிலிக் கொருப்பின் நெய் பண்பாய்ச் சேர்த்து
நிலமதி லேஜல் காந்திடுவீர
கடுப்பு முளை விழுதல் போக்கொளி
உரைத் தைகள் போலும் தாமரை கிளை போல்
திண்டு முளை விருத்தல் ஆமையுண்டு போல்
அதுமுளை திரையக் கண்டு புகைச்சிக
புகைக் காரங்கள் போடலாம்
திண்டிலான தாமரைச் சிலந்தி
பவுத்திர ரோகம் கண்டமாக
கிருக் கட்டுக் கிருக தொண்டைப் பிளவை
தொப்பிள் சிலந்தி அண்டையமார்பில்
ஆணிச் சிலந்தி பெண்கள் மார்பில்
புறை முளைக் குத்து முதுகுப் பிளவை
மூலப் பிழவை பக்கப் பிளவை
பழுவாழைச் சிலந்தி மேக்குப் பருக்கள்
முளை அரையாப்பு ரோக்குப் பிளவை
நரம்புச் சிலந்தி, கன்ன விப்புருதி
யோனிப் புற்று, லிங்கப் புற்று
நேத்திரப் பிளவை குவளை விப்புருதி
குழிவாழைப் புண்ணும் திடைவாழைக்கட்டு
தேய்த்து இக்குவி வாயில் கொஞ்சம் விடவி

24.6.85

சோளப்பயிர் தின்று சொக்கியமாட்டுக்கு
மிளவேலிப்பருத்திச் சாற்றில் கிழஞ்செடை
ஆண்மையாய்ச் சேர்த்து அன்புடன் கொட்டையில்
வெள்ளாவும் நீரணங் கொடுத்திடத்தீரும்
நிலவுகால் சீவன் பெலமா சாதிக்கெல்லாம்
உதிரநோய் தள்ளி எந்தவியாதிக்கும்
இப்படி முறையால் சந்தேகமில்லாமல்
தீரன் கொடுத்திடலாம் மைந்தரே கேளீர்
மனிதரெவ்வுயிர்க்கும் உண்மையாய்ச் சொன்னோம்
ஒருகுழம் பதனல் குருவருளாங் கூறினோம்.
நின்றாய் யாவர்க்கும் இவுசிகமாமுனிநானே.

குருபாதமே துணை — × — பராசக்தி துணை.

— நஞ்சுமுறிவுக்கு —

எட்டிக்கு நாவல், எருதெண் தான்றிக்காய்
வட்டமுள்ள ஊமத்தை தாமரையாம் — இட்டமுடன்
ஆவாரை கள்ளிக்கு, அலரிக்குக் கடுக்காய் — மேவிடுநேறுக்கு.
வெந்தகப்பாலையரே யெள்ளோடு சர்க்கரையாம்
என்று — ரெடுக்கிலக்குவள்ளால் சங்கம்பழம் — மொள்ள
நீத்துக் கடுஞ்சள், நேர்வாளம் இவ்வசம்பு — வேந்தன்
சிவதைக்கு வெள்வேலாம், — போந்தியுடன்
அல்வேரும் சர்க்கரையும் தேற்றக்கித் தின்போர்க்கு
அல்லாரும் சொன்னார் விளாம்பிச்சு — நல்லாய்க் கேள்
நாவி சிறுகீரை, நற்குன்றி வெண்காரம்
திராவியப்ராசாணத் தரும்ளக — பாவையரே
வெத்திலியோ டெள்ளொன்னை விளாவிக் கொடுப்போர்க்கு
முத்தின தேங்காய் மொழிந்தோமே. — இத்தகையும்

21.6.85

நீலிக்குத்திடுமென்று நிச்சயமென்றேமுன்வர்
போதித்தார் நஞ்சுவகை போகுமே.

— இராசமிருதாங்கச் சூரணம் —

ஒன்றாக அன்னமொரு சூரணங்கேள்
உத்தமனே சந்தனமுங்கீழ் நாடுங்கட்டை
குன்றான லவங்கத்தோல், கிராம்பு, சோம்பு
குணமான அதிமதுரங், கார்போகவித்து
திறமான அருகன் வேர், சித்திராமுட்டா
பன்றான சரக்குவகை ஒன்பதுந்தான்
பாலகனே வகைவகைக்குப் பலந்தான் வாங்கே
வாங்கியதை இளவறுப்பாய்ச் சூரணமே செய்து
வகையான கல்கண்டு அதனிடைக்குக் கூட்டு
தேங்கியே வெருகடிதான் அந்திசந்தி
திறமாகப் பசுநெய்யிற் கூட்டியுண்ணு
ஓங்கியே ஓடுகின்ற வெள்ளை தீரும்
உத்தமனே நீரெரிப்பு உடனே தீரும்
பாங்குடனே பத்தியந்தான் காரமாகா
பரிவான பண்டிதரே பாகந்தானே.

— பிரமியங்களுக்கு. —

கொடிவேலி வேர்ப்பட்டை கிராம் — 35
இரசகற்பூரம் — கிராம் — 4
மருந்து வெள்ளை — கிராம் — 2

அரைத்து உருண்டை செய்து காலமே மோரும் பழைய
தும் சாப்பிட்டு, வெங்காயம் தொட்டுக்கொண்டு
11 — நாட்கள் சாப்பிடவும் பிரமியம், வெட்டை
சிறுகில் தீரும்.

24.6.85 சீர்பொருந்தும் சாத்திரமும் மருந்து வைப்பும்
தெய்வீகம் நாப் போல பலதுஞ்சொல்லி
ஏர்பொருந்தும் எழுத்தாணி அடம்பிடுக
இயல்பான கருவிமுதல் மைக்கிரையுஞ்செய்பு
கூர்பொருந்துஞ் சாத்திரங்கள் சொன்னாரானால்
குருவாகும் அவருடனே எதிர்க்கவேண்டாம்
சீர்பொருந்துஞ்சாத்திரங்கள் சொல்லாவிட்டால்
பிண்டாரர் மருந்துடனே மையை வாங்கே. ௧.

பகையாதே அவருடனே எதிர்க்கவேண்டாம்
பன்னிரண்டுமிழை நீக்கி யிந்தநூலை
குறையாமல் இருந்துநீ விருந்துவாங்கி
கொள்ளவே அவருடைய திருவம் போனால்
நிறையாக நீடனுய்வந்தானானால்
நேர்மையாய் விருதீந்துவாக்குச்சொல்லி
திறையாகப் பதிவுரைத்து வைப்புஞ்சொல்லி
திட்சமாய் மனமறிந்து சொல்லச்சொல்லே. ௨

நாறுசம் படைத்தனைக்குப் பேர்தான்சொல்லும்
நின்றாக இடதுகையில் ஓதிசொல்லும்
ஓறுமல் ஊன்றியதோர் உண்மைசொல்லும்
ஓட்டுமுடத்தெட்டெடுத்தின் உருவம் சொல்லும்
வாறாமல் அங்கத்த வசனம்சொல்லி
உயர்ந்தங்கே சென்றவைத்தவடுவைச்சொல்லி
நேராக நின்றமுத்தின் நிலையைச்சொல்லி
நிச்சயமாய் அரியன்னும்பொருளும் ~~சொல்லே~~ சொல்லே ௩

நிராசம் பிறந்தனையோர் ஞானமூர்த்தி
நின்றாக கடந்தையில் ஒளி சத்தி.
வேறாமல் ஒன்றியதோர் உண்மைஞானம்
ஆட்டமைதந் தைட்டைகுத்தின் உருவம் யோனி
தா

பாராமல் அங்குதித்த வசனம், வாய்வு
பாழுங்கே சென்றடைந்த தவபூவலிங்கம்
நேராக நின்றுத்தே அடியாதாரம்
நிச்சயமாய் அரியென்னும் பொருளும் நீயே.
சு

குளிர்ந்திருக்கும் அம்மிக்குப் பேர் தானென்ன
கூடாடும் குழவியுட பேர் தானென்ன
தெளிந்தரைக்கும் விரலுக்குப் பேர் தானென்ன
தேகமுறும் மருந்துக்கும் பேர் தானென்ன
நிலந்திருக்குஞ் செப்புமுதலைடைப் புதாணும்
நான்முகத்தோன் உருத்தபட நன்றாய்ச் சொல்லும்
மொழிந்துறையும் பண்டாரரேயிந்நாளில்
மோசங்கள் வாராதென் றருள் மொழிந்திட்டேரே.
ரு

குளிர்ந்திருக்கும் அம்மியது சத்தியாகும்
கூடாடும் குழவியது லிங்கமாகும்
தெளிந்தரைக்கும் விரலைந்தும் பஞ்சபூதம்
தேகமுறும் மருந்தெல்லாம் சிவமேயாகும்
நிலந்திருந்த செப்புமுதலைடைப்புத்தாணும்
நாதருட சிகாரத்தில் போட்டமாச்சு
மொழிந்துறையும் பண்டாரரேயிந்நாளில்
மொழிந்துரைத்து அம்மிதனை வாங்கிட்டேரே.
கா

24.6.85

உரைக்கிறதோர் செந்தூரம் பேர்தானென்ன
உத்த இரசகெந்திமுதல் தாரமேது
அரைக்கின்றமண்ணுமுதல் சீலையேது
அதனடுவே குப்பிமுதல் சலாகையேது
நிறைக்கின்ற அடுப்புமுதல் தீபமேது
நிகழாதமணலேது தாழியேது.
. . . .
. . . .

எ

அஞ்சுருவாயெடுத்ததொருபஞ்சலோக.
அடைப்பேது செப்பேது அறிந்துசொல்லும்
கிஞ்சமேதாம்பூர லோகம் சொல்லும்
கிளிப்பான பித்தளையின் திருவகம்
வெஞ்சமரில் சாத்திரங்கள் எடுத்துப் பேசி
வேதாந்தம் சித்தாந்தம் விரித்துச் சொல்லும்
நெஞ்சகந்த பண்டாரரேயிந்த நாளி
நேயந்து நீ உன்னுடைய பையைவாங்கே.

க. x

அஞ்சுருவாயெடுத்ததொருபஞ்சலோகம்
அடைத்திருந்த செப்பு இருபேதுரைக் கேட்க
கிஞ்சமடா ஆகாசம் செப்புவன்னி
கிழ்வான சேரமடாவாய் வேயாகும்
வெஞ்சமடா பித்தளைபிருதிவுமாகும்
வேதாந்தம் திரவென்றால் அப்பின் கூடு
நெஞ்சகந்த பண்டாரரேயிந்தநாளி
நாடறிய இன்னதென்று சொலுவாயே

உ

இஞ்சமென்ற ஆகாசம் நிறத்தைச் சொல்லும்
இருஞ்செப்பு வன்னியுட நிறத்தைச் சொல்லும்
வஞ்சமென்ற லோகந்தான் வாய்வேயாகும்
வரும் பித்தகாயிர்திவுக்கு நிறத்தைச் சொல்லும்
மிஞ்சவே திரவுக்கு அப்பின் கூறு
விதமான நிறத்தையெல்லாம் விரும்பிப்பார்த்து
அஞ்சாமல் எடுத்துரைக்கும் வயித்தியோனே
அவ்வொன்றாய் இன்னதென்று உரைத்திட்டேனே
௩

இஞ்சமென்றால் ஆகாசம் புகைபோல் மேனி
இருஞ்செப்பு நிறமென்றால் சிவப்பேயாகும்
வஞ்சமென்றால் லோகந்தான் உறப்பேயாகும்
வரும் பித்தகாயென்றால் பொன்போல் மேனி
மிஞ்சவே திரவகம் அப்பின் கூறு
விதமானபடகம் போல் நிறத்தைச் சொல்லு
அஞ்சாமல் எடுத்துரைக்கும் வயித்தியோரே
அவ்வொன்றாய் இன்னதென்று உகந்துகேளே.
௪

திடமான ஆகாசத்தின் வீட்டைச் சொல்லு
தேடரிய தாம்பிரத்தின் வீட்டைச் சொல்லும்
உத்தமமாய் லோகத்தின் வீட்டைச் சொல்லு
திடமான திரவகத்தின் வீட்டைச் சொல்லு
திருவான அஞ்சனுட சக்கரத்தின் வீடு
திடம்பெரிய வயித்தியரே யிந்தநூலை
சூட்சமாயின்றாலித் திறந்திட்டேரே.
௫

24.6.85

திடமான ஆகாசம் வீடுவட்டம்
தேடரிய தாம்பூரமுக் கோணந்தான்
உடலான வித்தகா வீடு சதுரக் கோணந்தான்
உத்தமமாம் லோகத்தின் அறு கோணந்தான்
சிடமான திராவுக்குப் பிறை போலாகும்
திருவான அஞ்சின்ட சக்கரத்தின் வீடு
திடம் பெரிய வயித்தியரே யிந்தனுக
திட்சமாய்ப் பணிந்து நீ கேளு கேளே
௬

தேடரிய சக்கரத்தின் எழுத்தைச் சொல்லுவ்ந்
திகப்பான தாம்பிரத்தின் அட்சரத்தைச் சொல்லும்
ஏடரிய லோகத்தின் எழுத்தைச் சொல்லும்
இயல்பான வித்தகாயின் எழுத்தைச் சொல்லும்
கோடரிய திராவக்கு அட்சரத்தைச் சொல்லும்
திருவாகும் பண்டிதரே தொகுத்துப் பார்த்து
நாடரிய இன்னூலின் எழுத்தைச் சொல்லும்
நின்றாக மருந்து செய்ய வாங்குவாங்கே.
௭

தேடரிய கஞ்சன் தான் அகாரமாச்சு
தீயான தம்பூரம் சிகாரமாச்சு
தோற்றிய திராவக்கு மகாரமாச்சு
திருவாகும் முருவான பஞ்சபூதம்
சீற்றிய சிகாரமது நடுவேயாச்சு
சிறப்பான கருஉனக்கும் காணலாச்சு
நாடரிய யின்னூல் தன்றாய்ச் சொல்வேன்
கோணமில்லா வயித்தியரே நன்றாய்க் கேளே.
௮

மத்ததினால் கண்டந்தச் செப்பு வகைதான் சொல்லும்
வளர் மூன்று விரலுக்கு வகை தானென்ன
திறத்தினால் மாகுடைய கொம்பைச் சொல்லும்
திறமான மேதி குலச் செப்பைச் சொல்லும்
பரத்தினால் எருந்தபசு யினத்தின் செம்பு
பாங்கான கரியினுட மேலுஞ் சொல்லும்
திறத்தினால் எருந்தொரு கரியின் கொம்பை
திடம் பெரிய வயித்தியரே செய்திட்டீரே.

சு.

மரத்தினால் கிடைத்த செப்பு காந்திமேசி
மா பெரிய வேங்கினுட விடமுமாகும்
திறத்தினால் கடைந்த மிராமாலி கோரம்
திறமான மேதி குலம் காலபீடம்
திறத்தினால் கரியென்றால் கொம்பின் செப்பு
தீர்பெருகும் கியமகனில் பேலமாகும்
வரத்தினால் நாதாக்கள் அமைத்தபேரும்
உண்மையுள்ள நாடியிது வாலைபாரே

கொங்கணர் நாடி முற்றிற்று.

(தேடப்பில் கிடைக்கப்பட்டார் ஏடுவில் கொங்கணர் நாடி முற்றிற்று எனக் கூறப்பட்டுள்ளது.)

ஆளப்பா ஆறு மாதம் சென்றதாடா
அப்பனே படிபத்து புளித்த மோரும்
நாளப்பா படிபத்துக் கூட்டிவிட்டு
நிலமான புளியிலே தாக்கிடத்துப் போட்டு
கேளப்பா திருப்பிடத்த இரும்பு தாக்கிப் போட்டு
கொதிக்கவைத்து எட்டொன்றாய் இறுத்துக் கொண்டு
வளமான கையான்சார் படிதான் ரெண்டு
உத்தமான இஞ்சிச்சார் படிதானென்றே.
௧

ஒன்றான பழச்சார் படி தானென்று
செருப்படைச் சார் படிதான் ஒன்று
உத்தமனை நெருஞ்சிச் சார் படிதானென்று
சேறான சிறுகீரை படி தானென்று
தென்னம் பூச் சார் படி தானென்றே
கிழாநெல்லிச் சார்படி தானென்று
பாங்கான ஆவின்பால் படி தானது
திறமான பனைவெல்லம் பலந் தான்பத்து
௨

பத்தாகக் கரைத்துவிட்டுப் பா காய்ச்சி
பக்குவமாய்க் கடைச்சரக்கு திரிகடுகு ஏலம்
தானயித் திரிபலையும் கோட்டம் மரமஞ்சள்
நிலமான ஏலம் சீரகமும் வால்மிளகு
தான் கிராம்பு – தாளிசபத்திரி
கிருவான லவங்கத் தோல் ஆனைத்திப்பிலி
ஒன்றாகப் பலமொன்று தூக்கிக் கொண்டு
குறையாமல் இவ்வாறு பாய்ச் சூரணம் செய்யே.
௩

செய்யப்பா முன்பாகில் தாவிக்கின்ற
சிறப்பான ஆவின் நெய் படி தான் வாரு
செய்யப்பா தேனதிலே படி தான் வாரு
திணமாகிலே கியத்தைப் பதமாய்ச் செய்து பதனம் பண்ணு
கைமுறையாய் இருநேரம் இருகாஞ்சி விதம்
பருவகாய்ப் பான் புவகை எல்லாந்தீரும்
மைந்தனே பித்த வெட்டை பித்தவாய்வு
மயக்கமொடு அக்கினிமந்தந் தானே.

சி

சென்மமிசு வேலவர்க்குச் சேர்ந்த கொம்பு ரெண்டு.
வள்ளிக்குக் காலில்லை ஆட்டுக்குக் கொம்பில்லை
யானைக்குக் காலில்லை பாட்டுக்குள்ளாராய்ந்து பார்

கையை முதல் பார்த்து கண்ணு முகம் நேர் பார்த்து
செய்யும் வியாதி திறப் பார்த்து — மெய்ய
விரலால் மருந்தளித்து வியாதிதனைத் தீர்ப்பதினால்
பரிகார் எங்களுக்குப் பட்டம்.

மிக்க குலம் பிரம்மமென்றுஞ் சொல்வீராகில்
மீன வாணிச்சி புள்ளா வேத வியாசன்
திகப்பராசன் தாயார் சண்டாளிச்சி
அத்திமுனிவன் தாயார் வள்ளிவச்சி
தொக்கவ துட்டன் தாயார் யோகாலிச்சி
சொல்லு நாரதன் தாயார் வேசியென்றேதக்
கியில் வரதவமதனால் பிரம்மமானார்
சாதியினில் தாழ்வுயர்வு சாற்றொணாதே–

தந்தை குல மோ. பாப்பான்
தாய் குல மோ சக்கிலிப் பெண்
வந்தவகையறியான் கோமட்டி
முந்தும் சாணான், உவச்சன்
சக்கிலியன் கோமட்டி, மேனுங் கடைக்குறேல்

— பயிரவி சூரணம் —

சூதமும், வீரமும், பூரமும் நேர்,
அக்கம்பெற்றிடும் நாதமும் லிங்கமும்நேர்

காரமும் வாசகற்பூரமும் நேர்
கண்டத்தை கோசாமங்கல் வத்திலாட்டிட

நீதமில்லாமலே பணவிடை கொண்டிட
நெஞ்சிலடைப்பு சன்னிபதி மென்றும்

ஒருபாரமதான வலிப்புடன் வாய்வு
பாந்துடன் ஓடுமே பயிரவி சூதம்தே.

(குறிப்பு):- (அரைத்தெடுத்துக் கொண்டு மாத்திரை போலெடுத்துக் கொள்ளவும்.

அடுத்து. ✲ இக்குறிப்பிட்ட மேன்றுரைடுகள் எழுத்துதெல்லில்ல-

இரசபற்பம் (இதுசெய் முறை உபயோகவிபரம் இல்ல.

இரசம் கிராம் —35, இந்துப்பு—35, வளையலுப்பு கிராம் -35
அன்னபேதி கிராம் —35, படிகாரம் கிராம் —35
பானை இரண்டு -- விறகு கட்டு —1-

- இரசமாத்திரை - (அளவு; அனுப்பானம் இல்லை)

இரசம் கிராம் —35, வெங்காரம் கிராம் —35, அரப்பொடி கிராம் —35 எலுமிச்சம்பழச் சார் விட்டு அரைத்து வெயிலில் வைத்து தென்ல் கொள்ளவும்
நீர்கவுணை, நீர்பாண்டு, மகோதரம் தீரும்.

ஆறுமுகச் செந்தூரம்

இரசம்—6, ஆடன்-3, வெடியுப்பு—6, சாரம்—6, வீரம்-6
நீறுக்காரம்—6, வெள்ளைப் பாசாணம் ½—, துரிசு—½
கெந்தகம்—½, இரசத்தைச் சுத்தி செய்து கொண்டு
மற்றச் சரக்குகளைப் பொடி செய்து கொண்டு இரண்டு
சட்டி கொண்டுவந்து சட்டிக்கு மத்தஞ் சார்த்தடவி
பொடியில் பாதி சட்டியில் ~~[illegible]~~ போட்டு இரசத்தை அதில்
விட்டு மேலும் பொடியைப் போட்டு மேற் சட்டி மூடி
சீலை செய்து அடுப்பில் வைத்து, தீபாக்கினியாக ஒரு சாமம்
எரிக்கவும் மேற்சட்டியில் மருந்து பதங்கித்திருக்கும்
அதை எடுத்து (50 மில்லிகிராம்) பனைவெல்லத்தில் வைத்துச்
சாப்பிடவும் குன்மம் எட்டும் தீரும். வாயு, சகலசுர
மும் ஈழைக்கட்டும் தீரும்.

—இஞ்சா லேகியம்—

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், அதிமதுரம், ஏலக்காய்
பெருஞ் சீரகம், கோட்டம், மல்லி, நெல்லிமுள்ளி, தாளிசபத்
திரி, இலவங்கப்பத்திரி, யாலிவிதை, கசக்கோல்விதை
சாலாமிசிரி, சிமைக் ~~[illegible]~~ நீர்முள்ளி, உருத்து, கோசை
சிப்சாவிதை, ருன்மிசர், சாரப்பருப்பு வகைக்கு—35 கிராம்
கிராம் 4—18 கிராம், வால்மிளகு கிராம்—9, பேரீச்சங்காய்
140 கிராம், திராட்சைப்பழம் கிராம்—140, சர்க்கரை கிராம்
சர்க்கரை கிலோகிராம்—2-500, இஞ்சா கிராம்—70
நெய் லிட்டர் ஒன்று
இஞ்சாவை தண்ணீர் லிட்டர் இரண்டு லிட்
நெய்யும் விட்டுக் இஞ்சாவைப் போட்டுக் காய்ச்சி
நெய்யை எடுத்துக் கொள்ளவும்

எழுதியவர்
மருத்துவர் T-தேவபா

(செய்முறை—உபயோகமுறை இல்லை)
இந்த ஏடு எழுதப்பட்டது: நல்ல முறைகள் இருப்பி
னும் தெளிவு இல்லை [redacted].